Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்: 12 வள்ளுவர் ஆண்டு 2027 மார்கழி 01 திங்கட்கிழமை (16-12-1996) UTHAYAN A Lively National Tamil Daily கதிர்: 20

# வடக்கின் உள்ளூராட்சித் தேர்தல்

# 3 மாதங்களுக்கே பிற்போடப்பட்டது!

## தமிழ்க் கட்சிகளை அதற்குள் தயாராகுமாறு கேட்கிறது அரசு

கொழும்பு, டிசம்பர். 16

வடக்கில் நடத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்கள் மூன்று மாத காலத்துக்கு மட்டுமே பிற்போடப்பட்டுள்ளன. அதற்குள் தமிழ்க் கட்சிகள் அத்தேர்தல்களில் பங்கு பற்றக் கூடியதாகத் தயாராகி விடவேண்டும்.

- இவ்வாறு தமிழ்க் கட்சிகளுக்கு அரச உயர் பீடம் தெரிவித்திருப்பதாக அறிய வருகின்றது.

ஈ. பி. டி. பி, புளொட் ஆகிய கட்சிகளின் பிரதிநிதிகள் அண்மையில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவை சந்தித்த சமயம் மேற்படி தேர்தல்களை ஒத்தி வைக்கும்படி அவரைக் கோரியதும் —

அக்கோரிக்கையை ஏற்று தேர்தல்களை பிற்போட ஜனாதிபதி இணங்கியதும் தெரிந்தவையே.

"தேர்தலை பிற்போட ஏற்பாடு செய்கிறேன்; ஆனால் அது 3 மாதத்துக்கு மேல் நீடிக்கப்படமாட்டாது. அதற்குள் ஏனையோருடன் இணக்கம் கண்டு தேர்தலுக்கு நீங்கள் தயாராகி விட வேண்டும்." — என்று ஜனாதிபதி அப்போது தெரிவித்தாராம்,

## 24 இந்திய படை உயரதிகாரிகள் கொழும்பு வந்து பேச்சு நடத்தினர்

### ஜனாதிபதி செயலகத்தில் சந்திப்பு

கொழும்பு, டிச. 16

இந்திய தேசிய பாதுகாப்பு அக்கடமியின் 24 உயர் படை அதிகாரிகள் கொண்ட குழு ஒன்று இலங்கை வந்து திரும்பியுள்ளது.

அண்மையில் இலங்கை வந்த இக்குழு கொழும்பில் உள்ள தாஜ் சமுத்திரா ஹோட்டலில் தங்கியிருந்தது.

இக்குழு ஜனாதிபதி செயலகத்தில் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரைச் சந்தித்து கலந்துரையாடியது.

வழமையான விஜயம் இது என்றும் —

மரியாதை நிமித்தம் ஜனாதிபதி செயலகத்துக்கு குழு

(8 ஆம் பக்கம் பார்க்க)

### இலங்கை அரசு -- புலிகள் பேச்சுக்கு

## வேறு நாடு மத்தியஸ்தம் வகிப்பதை இந்தியா ஆட்சேபிக்கமாட்டாது!

கொழும்பு, டிச. 16

இலங்கை அரசுக்கும் —விடுதலைப் புலிகளுக்கும் இடையில் பேச்சுக்கள் ஆரம்பிக்க மூன்றாம்தரப்பாக வேறு ஒரு நாடு மத்தியஸ்தம் வகிக்க முன்வந்தால் இந்தியா அதை ஆட்சேபிக்காது.

இலங்கை விடயத்தில் மூன்றாம் தரப்பாக வேறு ஒரு நாடு தலையிடுவதைஇந்தியா விரும்பாது என்று பரப்பப்படும் வதந்தி குறித்தே இந்தியா மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது என்று 'இந்து' பத்திரிகை தெரிவித்துள்ளது.

மூன்றாம்தரப்பு மத்தியஸ்தம் பற்றிய விவகாரம் சூடு பிடித்துள்ள இந் நிலையில் மூன்றாம்தரப்பு மத்தியஸ்

(8 ஆம் பக்கம் பார்க்க)

### ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்தக் கோரி

## இலங்கை-இந்திய அரசுகள் மீது இரு தலைநகர்களிலும் வழக்கு!

### ஈ. பி. டி. பி. முஸ்தீபு

கொழும்பு,டிச.16

இலங்கை—இந்திய சமாதான உடன்படிக்கையை முழுமையாக நடைமுறைப்படுத்த இந்திய—இலங்கை அரசுகளுக்கு உத்தரவிடுமாறு கோரி புதுடில்லியில் இந்திய உயர் நீதி மன்றத்திலும், கொழும்பில் இலங்கை உயர் நீதி மன்றத்திலும் ஈ.பி.டி.பி. சார்பில் தனித்தனியாக வழக்குகள் தாக்கல் செய்யப்படவிருக்கின்றன.

இந்திய—இலங்கை உடன்பாட்டின் பிரகாரம் வடக்கு —கிழக்கு மக்களின் பாதுகாப்பை உத்தரவாதப்படுத்துவது, இலங்கை—இந்திய அரசுகளின் கட்டுப்பாடு என்றும்—

இந்தக் கட்டுப்பாட்டை செயல்படுத்தவே இந்த வழக்குத் தாக்கல் செய்யப்

(8 ஆம் பக்கம் பார்க்க)

ரூ. 27 லட்சம் பெறுமதியுடைய

## 'ஸ்மாட்' குண்டுடன் வடக்கு வானில்விமானம்

கொழும்பு, டிச. 16

இஸ்ரேலில் இறக்குமதி செய்யப்பட்ட ''ஸ்மாட்'' ரக குண்டுகளுடன் நவீன விமானம் ஒன்று வடக்கு வானில் வட்டமிட்டு வருகிறது என்று கொழும்புத் தமிழ்ப் பத்திரிகை ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

மூன்று மாதங்களுக்கு முன்னர் இந்த விமானம் கொள்வனவு செய்யப்பட்டது. இந்த விமானத்தின் குண்டு ஒன்றின் பெறுமதி 27 லட்சத்து 50ஆயிரம் ரூபா எனத் தெரிவிக்கப்படுகிறது.

கம்பியூட்டரின் வழி நடத்தலில் இக் குண்டு இலக்குத் தவறாமல் தாக்கக் கூடிய வல்லமை கொண்டது.

விடுதலைப் புலிகளின் வாகன அணியை அழிக்கவே இது பயன்படுத்தப்பட விருப்பதாக தெரிவிக்கப்பட்டது.

— இப்படி அந்தப் பத்திரிகை தகவல் வெளியிட்டுள்ளது.

(உ-3-150)

### முச்சந்தி முரளி



பேரைப் போலை குண்டும் மிடுக்காய் இருக்கும் போலை.........!

## பொருளாதார இலக்கை தாக்க புலிகள் முடிவு!

### 'சண்டே ரைம்ஸ்' தகவல்

கொழும்பு, டிச. 16

இலங்கையின் பொருளாதாரத்தை முடக்கும் வகையில் பொருளாதார இலக்குகளை இனித் தாக்குவோம் என்று கிழக்கில் உள்ள விடுதலைப் புலிகளின் உயர் தலைவர் ஒருவர் தெரிவித்ததாக 'சண்டே ரைம்ஸ்' நேற்று செய்தி வெளியிட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்துக்குச் சென்ற அப் பத்திரிகையின் செய்தியாளருக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இப்படிக் கூறியுள்ளார்.

அவரின் கண்ணோட்டத்தில் தெரிவிக்கப்பட்ட சில விடயங்கள் வருமாறு:-

கிழக்கு மாகாண அரசியல் பொறுப்பாளர் துரையை

(8 ஆம் பக்கம் பார்க்க)

## ஆயுதக் கப்பலை எதிர்பார்த்து யாலவில் புலிகள் காத்திருப்பு

கொழும்பு, டிச. 16

யால காட்டை அடுத்துள்ள கடற்கரைப் பிரதேசத்தில் தமது ஆயுதக்கப்பலை எதிர்பார்த்து விடுதலைப் புலிகள் காத்திருப்பதால் அப்பகுதியில் அவர்களின் நடமாட்டம் அதிகரித்துள்ளது என கொழும்பு பத்திரிகை ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

தற்போதையகால நிலையில் வடக்கு — கிழக்கு கடற்பகுதியில் கப்பல்கள் வரவோ, போக்குவரத்துச் செய்யவோ ஏற்ற சூழ்நிலை இல்லை என்றும் —

இதனால் யாலப் பகுதியை விடுதலைப் புலிகள் பாவிக்கின்றனர் என்றும் — தெரி

(8ஆம் பக்கம் பார்க்க)

## பேச்சை ஆரம்பிக்க முன் யுத்தநிறுத்தம்செய்வதா?

### ஐ.தே.க. அதை எதிர்க்குமாம்

கொழும்பு, டிச. 16

விடுதலைப் புலிகளுடன் பேச்சு ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர் யுத்த நிறுத்தம் கொண்டுவருவதை ஐ.தே.க. எதிர்க்கும் என்று ஐ.தே.க வின் உயர்மட்டப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்திருக்கின்றார்.

(8 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## சரவணமுத்து இராசேந்திரம்

(இளைப்பாறிய கிராம அலுவலர்)

புங்குடுதீவு மேற்கு 2ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த ச. இராசேந்திரம் 11–12–96 அன்று பிரான்ஸில் காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 15-12–96 இல் பிரான்ஸில் இடம் பெற்றன.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
**இ. மகேஸ்வரன்**
(மகன்)

263 2/2 காலி வீதி,
கொழும்பு — 03.

(44150)

## சுப்பையா குணரத்தினம்

சங்கானையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், உரும்பிராய் மேற்கை வசிப்பிடமாகக் கொண்டவருமான சுப்பையா குணரத்தினம் (இளைப்பாறிய புள்ளி விவர அதிகாரி) 15-12-96 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் புஸ்பமணியின் அன்புக் கணவரும், வினோதினி (கனடா), சாந்தினி (அமெரிக்கா), தேசப்பிரியன் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், பகீரதன், இரவீந்திரா ஆகியோரின் அன்பு மாமனாரும், கொட்பிறே, ஜொவ்றீ, துர்க்கா, கபிலன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை உரும்பிராய் மேற்கிலுள்ள அவரது இல்லத்தில் இன்று (16 - 12 –96) திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**புஸ்பமணி குணரத்தினம்**
(மனைவி)

மானிப்பாய் வீதி,
உரும்பிராய் மேற்கு,
உரும்பிராய்.

(44143)

## செல்வன் அருந்தவராஜா கிருஷ்ணா

(பிரிவு அத்தியட்சகர், சென். யோன்ஸ் அம்புலன்ஸ்படை)

தெல்லிப்பழை உதவி அரசாங்க அதிபர் பணிமனை ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும், தற்போது 16/4 சீனியர் ஒழுங்கை, கலட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வன் அருந்தவராஜா கிருஷ்ணா நேற்று (15–12-1996) ஞாயிற்றுக்கிழமை அகால மரணமாகிவிட்டார்.

இவர் அருந்தவராஜா (நலன்புரி உத்தியோகத்தர் சிமெந்துக் கூட்டுத்தாபனம்), கௌரிதேவி தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வரும், நித்தியநர்மதன் (யூனியன் கல்லூரி) காயித்திரி, சயிந்திரி ஆகியோரின் சகோதரரும் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (16-12-1996) திங்கள் காலை 11-00 மணிக்கு நடைபெறும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
(44147) **அருந்தவராஜா** (தகப்பன்)

## கந்தையா கணேஸ்

இலக்கம் 219/5, கனகசபை வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியை வசிப்பிடமாகக் கொண்ட கந்தையா கணேஸ் 26-11-96 அன்று மகரகமை வைத்தியசாலையில் காலமானார்.

இவர் விமலாதேவியின் அன்புக் கணவரும், கௌசல்யா, விமல்ராஜ், கமல்ராஜ், கௌசியா ஆகியோரின் பாசமிகு தந்தையாருமாவார். அன்னாரின் பூதவுடல் கொழும்பில் தகனம் செய்யப்பட்டது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அன்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**மனைவி, பிள்ளைகள்**
[44145]

## சேவகி செல்வி பவளி அரியகுட்டி

## (பவளி அக்கா)

வீமன்காமம் தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், கிறிஸ்தவ இல்லம் கல்முனையை வசிப்பிடமாகவும் கொண்ட சேவகி செல்வி பவளி அரியகுட்டி ஆண்டவரின்மகிமைக்குள் 6-12-96 இல் பிரவேசித்து விட்டார்.

அன்னாரின் அடக்க ஆராதனை கல்முனையில் நடைபெற்றன.

இவர் காலஞ்சென்ற செல்வி பரிமளம்அரியகுட்டி (ஆசிரியர்), திருமதி செல்லாச்சி பீற்றர், செல்விறுத் அரியகுட்டி ஆகியோரின் சகோதரியும், தேவநேசன், தயாவதி, தேவராஜ், தேவதாசன், (பாபு) தேவசுந்தர், அருள்ராஜ், காலஞ்சென்ற தேவசுரேந்திரன் மற்றும் சுகந்தி, சந்திரராஜ் ஆகியோரின் ஆசை அம்மாவும் ஆவார். அன்னாரின் ஆத்ம சாந்தி ஆராதனை இல. 1, சோமசுந்தரம் அவனியு, சுண்டுக்குளி இல்லத்தில் இன்று மாலை 4-00 மணிக்கு நடைபெறும்.

தகவல்:
**அ. ச. அன்ரனிப்பிள்ளை**
(மருமகன்)
(டயானி இன்டஸ்றீஸ்)

(44151)

## பங்கர் வெள்ளத்துள் மூழ்கி மரணம்

யாழ்ப்பாணம், டிச. 16

தூர்ந்துபோய் வெள்ளம் நிறைந்திருந்த பதுங்கு குழிக்குள் (பங்கருக்குள்) தவறி விழுந்ததாகக் கூறப்படும் இளைஞர் அதில் மூழ்கி மரணமானார்.

கொக்குவில் தலையாளிப் பகுதியில் நேற்று முற்பகல் 11 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

காங்கேசன் சிமெந்துக் கூட்டுத்தாபன நலன்புரி உத்தியோகத்தரும், சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப் பிரிவின் பிரதேச அத்தியட்சகருமான திரு. க. அருந்தவராஜாவின் மகனான கிருஷ்ணா (வயது 21) என்ற இளைஞரே இவ்வாறு மரணமானார்.

காணி ஒன்றில் பங்கருக்கு அருகில் இருந்த பலா மரத்தில் பலாப்பழம் பிடுங்குவதற்கு முயன்ற சமயம் இந்த இளைஞர் பங்கருக்குள் வீழ்ந்ததாகவும் —

பங்கருக்குள் நிறைந்திருந்த சேற்று நீருக்குள் தலைகீழாக விழுந்த இவர் மூழ்கியதால் உயிரிழந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

(உ)

## மிதிவெடியில் காயமுற்றவர் மரணம்

யாழ்ப்பாணம், டிச. 16

கடந்த வெள்ளியன்று யாழ்ப்பாணம் ஆனைப்பந்தி நாவலர் வீதிப் பகுதியில் இடம் பெற்ற மிதிவெடிச் சம்பவத்தில் கழுத்திலும் முகத்திலும் காயமடைந்த ஒருவர் நேற்று முன்தினம் இரவு யாழ். ஆஸ்பத்திரியில் மரணமானார்.

சிறுப்பிட்டி மேற்கைச் சேர்ந்த சதாசிவம் நித்தியானந்தம் (வயது 35) என்பவரே உயிரிழந்தவராவார்.

இந்த மிதிவெடிச் சம்பவத்தில் மற்றொருவர் இரண்டு கால்களையும் முழங்காலுடன் இழந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (உ-3)

## ராதிகாவுக்கு விருது!

கொழும்பு, டிச. 16

இலங்கையின் பிரபல சட்ட அறிஞரான கலாநிதி ராதிகா குமாரசாமிக்கு இந்த வருடத்துக்கான மனித உரிமைகள் விருது வழங்கப்படவிருக்கிறது.

செல்வி ராதிகா குமாரசாமி தற்போது பெண்களுக்கு எதிரான வன்முறைகள் சம்பந்தமான ஐ.நாவின் விசேட குழுவில் தலைவியாக பணியாற்றுகிறார்.

சர்வதேச மனித உரிமைகள் சட்டக் குழு இந்த விருதை வழங்குகிறது.

(உ-3)

## அடையாள அட்டை விநியோகம்

யாழ்ப்பாணம், டிச. 16

நல்லூர் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட ஜே. 104, ஜே. 105 இலக்க கிராம சேவையாளர்கள் பிரிவுக்குட்பட்டோருக்கான விசேட அடையாள அட்டை விநியோகம் எதிர்வரும் வெள்ளிக் கிழமை நல்லூர் பிரதேச செயலர் அலுவலகத்தில் இடம் பெறவிருக்கிறது.

இந்த விநியோகம் இன்றும், நாளையும் மேற்கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டபோதும் தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போட நேரிட்டதாகச் சம்மந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-3)

# கண்ணீர் அஞ்சலி

## திரு. கந்தையா அருந்தவராஜா

(நலன்புரி உத்தியோகத்தர் - காங்கேசன்துறை சிமெந்துக் கூட்டுத்தாபனம்)

அவர்களின் சிரேஷ்ட புதல்வன்

## செல்வன் கிருஷ்ணா

15 - 12 - 1996 இல் அகாலமரணமானார். அவரது மறைவையொட்டி துயரடைந்திருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துகிறோம்.

**கலட்டி கற்பகவிநாயகர்**
**ஆலய நிர்வாகத்தினர்.**

(44152)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி வீரகத்திப்பிள்ளை கண்மணி

(ஈச்சமோட்டை)

யாழ். ஈச்சமோட்டையைப் பிறப்பிடமாகக் கொண்ட கார்த்திகேசு - நாகம்மா ஆகியோரின் அன்பு மகளான வீரகத்திப்பிள்ளை கண்மணி ஸ்கந்தபுரத்தில் காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற திலகவதி, திலகேஸ்வரி, மகேஸ்வரி, புஸ்பலோஸ்வரி (யாழ். போதனா வைத்தியசாலை), தவபாலன் (பிரான்ஸ்), பூபாலன் (கனடா), ரஞ்சினி (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், சுப்பிரமணியம் (புகையிரத நிலையம்), நடராசா, தர்மகுலசிங்கம் (யாழ். போதனா வைத்தியசாலை), தர்மலிங்கம் (இத்தாலி), ஞானம் (பிரான்ஸ்), நிர்மலா (கனடா), உதயகுமார் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும், சதீஸ், சுறாஷ், சுதா, சுறாஷனி, சுதன், கஜந்தன், பேர்லினி, பேர்க், றோகான் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஸ்கந்தபுரத்தில் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**திரு. திருமதி நடராசா**
(மகள், மருமகன்)

ஈச்சமோட்டை.

(44149)

## சுப்பையா நடேசு

நடுத்தெரு தொண்டைமானாறைச் சேர்ந்தவரான சுப்பையா நடேசு 13 - 12 - 96 இல் காலமானார்.

இவர் நாகம்மாவின் அன்புக் கணவரும், ஜெயராணி, ஜெயவதனி (கனடா), சுந்தரலிங்கம் (டென்மார்க்), பிறைசூடி (ஜேர்மனி), ஜெயவதனா, ஜெயமோகன் (கனடா), சிறீமோகன் (கனடா), யமுனாராணி (ஆசிரியை கொஸ்லாந்தை), வசந்தராணி (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், பத்மநாதன் (சவுதி), சுதா (குவைற்), குமார் (கனடா), யோகேஸ்வரன் (ஆசிரியர், கொஸ்லாந்தை) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 13 12-96 இல் அவரது இல்லத்தில் நடைபெற்றன என்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகின்றோம்.

தகவல்:
**க. துரைராஜா**
(மைத்துனன்)

335, ஆடியபாதம் வீதி,
யாழ்ப்பாணம்.

(44141)

## அம்பலவாணர் அற்புதரட்ணம்

(ஓய்வுபெற்ற பாதுகாவலர், யாழ். போதனா வைத்தியசாலை)

உடுவிலைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும், கொண்ட அம்பலவாணர் அற்புதரட்ணம் 15 - 12 - 1996 இல் காலமானார்.

இவர் காலஞ்சென்ற எமிலி பூரணத்தின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற ஏழாலை முத்துராஜா, உடுவிலைச் சேர்ந்த சாமுவேல் (சாம்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், அதிசயராஜா, காலஞ்சென்ற ஜெயராஜா, மற்றும் தர்மராஜா (சாமுவேல் அன்ட் கம்பனி), ஜெயதேவி, உதயகுமார் (சுவிஸ்), ரதிதேவி (நீர்கொழும்பு), சச்சிதானந்தம் (படப்பிடிப்பாளர்) ஆகியோரின் அன்புத் தந்தையும், பரமேஸ்வரி, தில்லைநடேசன், சந்திராவதி, தயாளசீலன், புனிதலோஜினி ஆகியோரின் அன்பு மாமனாரும், கேதீஸ்வரநாதன் (சதீஸ் — நீர்கொழும்பு), தர்மப்பிரியா (யா/உடுவில் மகளிர் கல்லூரி பழைய மாணவி), சோபிதா (யா/உடுவில் அ. மி. த. க. பாடசாலை), யாழினி, ராகுலன், துளஷிகா, றஜிகா, தனரூபன், கேதாரணி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று 15–12-96 இல் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகிறோம்.

தகவல்:
**தி. ஜெயதேவி**
(மகள்)

''தேவி வாசா'',
உடுவில் மகளிர் கல்லூரி மேற்கு வீதி,
உடுவில், சுன்னாகம்.

(சி/3738)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம் நூலகம்

# வவுனியா அகதிகள் விவகாரம்

# இலங்கை - இந்திய மன்றுகளில் வழக்கு?

## அரசுக்கு டக்ளஸ் எச்சரிக்கை

கொழும்பு, டிசம்பர் 16

வவுனியா தடுப்பு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் ஆயிரக்கணக்கான தமிழ் மக்களின் வாழ்வு நிலையை முன்னேற்றுவதற்கு டிசம்பர் 31 ஆம் திகதிக்கு முன்னர் அரசு ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்கத் தவறுமானால் —

இலங்கை — இந்திய ஒப்பந்த ஷரத்துகளுக்கு கீழ் இலங்கை அரசுக்கு எதிராக கொழும்பிலும் புதுடில்லியிலும் உயர் நீதிமன்றங்களில் ஒரே சமயத்தில் வழக்கு தாக்கல் செய்யப்படும்.

ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் செயலாளர் நாயகமும் யாழ். மாவட்ட எம்.பியுமான டக்ளஸ் தேவானந்தா அரசுக்கு இவ்வாறு எச்சரிக்கை விடுத்திருக்கின்றார்.

வடக்கு, கிழக்கில் உள்ள அனைத்து மக்களின் பாதுகாப்புக்கும் உறுதியளிக்கும் விவகாரத்தில் இலங்கை — இந்திய நாடுகள் ஒத்துழைத்து செயற்படும் என மேற்படி ஒப்பந்தத்தின் 2.14 மற்றும் 2.16 ஷரத்துகளுக்கு அமைய இரு நாடுகளும் இணக்கம் கண்டிருப்பதையும் அவர் சுட்டிக் காட்டினார்.

# புலிகள் தலைவர் பிரபாவும் போரை விரும்பவில்லை!

## தம்மிடம் கூறியதாக மன்னார் ஆயர் தகவல்

கொழும்பு, டிச. 16

''தமிழர்களுக்கு நீதியும் நியாயமும் கிடைப்பதற்கும், அவர்கள் கௌரவமான சமூகத்தில் வாழ்வதற்கான சூழ்நிலையை ஏற்படுத்துவதற்குமாகவேதான் போராட்டம் நடத்துவதாக விடுதலைப் புலிகள் தலைவர் வே. பிரபாகரன் என்னிடம் கூறினார்.''

— இவ்வாறு தெரிவித்திருக்கின்றார் மன்னார் ஆயர் அதி. வண. இராயப்பு யோசெப்.

கடந்த வாரம் வவுனியாவில் ஸ்ரீலங்கா செஞ்சிலுவைச் சங்க கிளை அலுவலகத்தில் நடைபெற்ற ஒரு பத்திரிகையாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தகவல் வெளியிட்டார்.

''நான் இந்தப் போரை விரும்பவில்லை. எவ்வளவு விரைவாக அது முடிவடைகிறதோ அவ்வளவு நல்லது. தமிழ் மக்களின் உரிமைக்காகவே தமிழீழ விடுதலைப் புலிகள் போராடுகின்றார்கள். வடக்கு - கிழக்கு எமது தாயகம் என்றே நாம் கோரி வருகின்றோம். அங்கு எமது மக்கள் கௌரவமாக வாழ வேண்டும் என்பதே எனது விருப்பம்'' — இவ்வாறு புலிகளின் தலைவர் பிரபாகரன் தம்மிடம் மேலும் கூறியதாக ஆயர் அங்கு கூறினார்.

ஐ. தே. கவின் தேசியப் பட்டியல் எம்.பியான டாக்டர் ஜெயலத் ஜெயவர்த்தனா உட்பட பல டாக்டர்கள், வவுனியாவில் கஷ்டமுறும் தமிழ் அகதிகளின் நலன் விரும்பிகள் என பலர் இந்த பத்திரிகையாளர் மாநாட்டில் கலந்து கொண்டனர். தெற்கிலிருந்து சென்ற 13 பத்திரிகையாளர்களும் பங்கு பற்றினர்.

இவர்கள் அனைவரும் வவுனியாவில் தடுப்பு முகாம்களில் கஷ்டப்படும் ஆயிரக்கணக்கான தமிழர்களின் அவலநிலையைக் கண்டறிவதற்காக வவுனியாவுக்குச் சென்றிருந்தனர்.

அவர்கள் மத்தியில் உரையாற்றிய மன்னார் ஆயர் —

மடு தேவாலய நிலைமை, வவுனியாவிற்குள் வந்துள்ள சுமார் பத்தாயிரம் தமிழ் அகதிகள் படும் அவலம், வவுனியாவுக்கு வெளியே ஏனைய வன்னிப் பிரதேசங்களில் தமிழ் மக்கள் அனுபவிக்கும் கஷ்டங்கள் ஆகியவற்றை அங்கு எடுத்துரைத்தார்.

அவர் மேலும் கூறியதாவது :-

நிலையான தீர்வு ஒன்று காணப்பட வேண்டியதன் அவசியத்தைப் போராளிகள் புரிந்து கொண்டிருப்பது நல்லதோர் எதிர்காலத்துக்கான நற்குறியாகும். தங்கள் உரிமை, தங்கள் கலாசாரம் ஆகியவற்றைப் பாதுகாப்பதன் மூலம் எதிர்காலத்தில் கௌரவமான வாழ்க்கையை உறுதிப்படுத்துவதற்காக அவர்கள் போராடுகிறார்கள்.

கத்தோலிக்க மதபீடம் வன்செயலை எப்போதும் ஆதரிக்காது என்பதையும் —

அனைத்துப் பிரஜைகளுக்கும் நீதியும் நியாயமும் கிடைக்க வேண்டும் என்பதை அது வலியுறுத்தும் என்பதையும் —

பிரபாகரனும் ஏனைய

(4 ஆம் பக்கம் பார்க்க)

# வெள்ளக் காலத்தில் ஏற்படக் கூடிய நோய்கள் குறித்து எச்சரிக்கை

யாழ்ப்பாணம், டிச. 16

தற்போதைய வெள்ள நிலைகளால் ஏற்படக் கூடிய சுகாதாரப் பிரச்சினைகள் தொடர்பாக எடுக்கப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை விளக்கி, சுகாதார சேவைகள் யாழ். மாகாணப்பிரதிப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி வை. ஸ்ரீகாந்த அறிக்கை ஒன்றை வெளியிட்டிருக்கின்றார். அதன் விவரம் வருமாறு:-

தற்போது எமது பகுதியில் பெய்துவரும் கடும் பருவ மழை காரணமாக குறிப்பாக குடிநீர் நிலைகள், வசிப்பிடங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. வயிற்றோட்டம், வாந்திபேதி, வயிற்றுளைவு, நெருப்புக்காய்ச்சல், செங்கண்மாரி, சளிச்சுரம் போன்ற நோய்கள் பெரிய அளவில் ஏற்பட வாய்ப்புகள் உள்ளன.

ஐந்து வயதுக்குட்பட்ட சிறார்களை வயிற்றோட்டம், சளிச்சுரம் ஆகிய நோய்கள் அதிகம் பாதிக்கின்றன. இவை இறப்புக்களையும் ஏற்படுத்தக் கூடியன.

இதனால் இக்காலத்தில் அனைவரும் பின்வரும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளைக் கையாளுவது அவசியம்.

★ எல்லோரும் கொதித்து ஆறிய நீர் அருந்துதல்.

★ தற்சுகாதாரம் பேணுதல், குறிப்பாக மலகூடம் சென்ற பின்பும், உணவு அருந்த முன்பும் சவற்காரமிட்டுக் கைகளைக் கழுவுதல்.

★ கீரை, பொன்னாங்காணி, வல்லாரை போன்றவற்றை பச்சையாக உண்பதில் கவனம் எடுத்தல்.

★ கண்ட கண்ட இடங்களில் உணவு அருந்துவதைத் தவிர்த்தல்.

★ சிசுக்கள், குழந்தைகளைக் குளிரில் இருந்து பாதுகாத்தல்.

★ வயிற்றோட்டம் கண்ட சிறார்களுக்கு போதிய நீராகாரம் கொடுத்தல். தேவைப்படும்போது ''ஜீவனி'' கரைசலை உரிய முறையில் கொடுத்தல்.

★ நோய் கண்டவிடத்து தகுதி வாய்ந்த வைத்தியரை நாடுதல்.

★ தத்தமது பகுதிபொது சுகாதார ஊழியர்களுக்கு நோய் குறித்து அறிவித்தல்.

★ [illegible]

(4 ஆம் பக்கம் பார்க்க)

# காணாமற் போனோர் விவரம் பத்திரிகையில்

கொழும்பு, டிச. 16

வடக்கிலும் நாட்டின் ஏனைய பகுதிகளிலும் கைது செய்யப்பட்டு — காணாமற் போகும் — நபர்கள் பற்றிய விவரங்களையும் அது தொடர்பான முறைப்பாடுகளின் சுருக்கத்தையும் கொழும்பிலிருந்து வெளிவரும் 'வீக்எண்ட் எக்ஸ்பிரஸ்' ஆங்கில வார இதழ் தொடர்ச்சியாக வெளியிட்டு வருகின்றது.

காணாமற் போவோரைக் கண்டுபிடித்து உதவும் நோக்குடன் இப்பகுதி ஆரம்பிக்கப்பட்டதாக அப்பத்திரிகை தெரிவித்துள்ளது.

தம்முடன் நெருக்கமானோர் காணாமல் போனால் அது பற்றிய முழு விவரத்தையும் 'ஆசிரியர், வீக்எண்ட் எக்ஸ்பிரஸ், 185, கிராண்பாஸ் வீதி, கொழும்பு 14'' என்ற விலாசத்துக்கு கடிதம் மூலமோ, இல: 439987 என்ற 'பக்ஸ்' செய்தி மூலமோ அறிவித்தால் அவை பிரசுரமாகும் என அப்பத்திரிகை தெரிவித்துள்ளது.

'வீரகேசரி' தமிழ் நாளிதழை வெளியிடும் 'எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் சிலோன் லிமிட்டெட்' நிறுவனமே இந்த ஆங்கிலப் பத்திரிகையையும் வெளியிட்டு வருகின்றது. (உ)

### காணாமற் போனோர் குறித்து

# இராணுவக் குழுவே விசாரணை நடத்துவதா?

## அமைப்புக்கள் கண்டனம்

வத்திக்கான், டிச. 16

இலங்கையின் வடக்கு - கிழக்குபகுதிகளில்பாதுகாப்பு படைகளின் காவலில் உள்ள தமிழர்கள் காணாமல் போவது குறித்துக் கண்டறிய இராணுவக் குழு ஒன்றை இலங்கை அரசு நியமித்துள்ளதை மனித உரிமை நடவடிக்கையாளர்கள் மற்றும் பிற குழுவினர் கண்டித்துள்ளனர். 'வத்திக்கான் வானொலி' இத்தகவலை வெளியிட்டது.

தமிழர்களுக்கு எதிரான இராணுவ அத்துமீறல்களைக் கண்டறிய இராணுவ அதிகாரிகளையே நியமிப்பது அர்த்தமற்றது என்றும் —

இராணுவம் மற்றும் படையினரின் கொடுஞ் செயல்களால்காணாமற் போவோர் பற்றி உறவினர், நண்பர்கள் மற்றும் உள்ளூர், சர்வதேச அமைப்புக்களின் முறைப்பாடுகளை மூடிமறைக்கவே இச்செயல் என்றும் —

மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் தெரிவித்துள்ளார். (இ-10)

### ஜனாதிபதி அறிவிப்பு:

# அதிகாரப் பர்கிவுச் சட்டம் 1997 முடிவதற்கு முன்!

## தீர்வுக்குப் பின்பே தேர்தலாம்

கொழும்பு, டிச. 16

''இனப்பிரச்சினையை யுத்தத்தின் மூலம் தீர்த்து வைக்க முடியாது. எனவே தமிழ்மக்களின் பிரச்சினைகளுக்கு நீதியான தீர்வைக் காணும் நோக்கத்துடன் அடுத்த வருட இறுதிக்குள் அரசாங்கம் அரசியல் யோசனைகள் சம்பந்தமான சட்டங்களைக் கொண்டு வரவிருக்கிறது.

''வடக்கு — கிழக்கு யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வரும் வகையில் அரசாங்கம் முன்வைத்திருக்கும் யோசனைகளுக்கு மக்களின் ஆணை பெற்றுக்கொள்ளப்படும்''

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க சிலாபத்தில் நடந்த கூட்டம் ஒன்றில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

''அடுத்த ஆண்டு முடிவுக்குள் அரசாங்கம் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பல தீர்மானங்களை எடுக்கவிருக்கிறது.

''எனவே அரசாங்கத்துக்கு தமது முழுமையான ஆதரவை மக்கள் வழங்க வேண்டும்.

''வேலையில்லாப் பிரச்சினை அடுத்த வருடத்தின் போது ஓரளவுக்குத் தீர்க்கப் பட்டு விடும்.

''இருப்பினும் இந்தப் பிரச்சினையை முழுமையாகச் சாதிப்பதற்கு அரசாங்கத்துக்கு இன்னும் 4 வருடங்கள் இருக்கின்றன.

''இந்தப்பிரச்சினைகளுக்கு தீர்வு கண்ட பின்னரே அரசாங்கம் தேர்தலை எதிர்நோக்கும்'' — என்று ஜனாதிபதி தமது பேச்சின் போது தெரிவித்தார். (உ—3)

# சித்த மருத்துவர் பதிவுக்கான நேர்முகப் பரீட்சைகள்

யாழ்ப்பாணம், டிச. 16

யாழ். மாவட்டத்தில் இருந்து சித்த மருத்துவராக பதிவு செய்வதற்கு விண்ணப்பித்த அபேட்சகர்களுக்கான நேர்முகப் பரீட்சைகள் எதிர்வரும் 22ஆம், 23ஆம் திகதிகளில் யாழ். அரச அதிபர் அலுவலகத்தில் நடைபெறவிருக்கின்றன.

கடந்த சில வருடங்களாக நடைபெறாத மேற்படி நேர்முகப் பரீட்சை தற்போது நடைபெற இருப்பது பற்றி ஏற்கனவே உதயனில் (6-1-96) செய்தி வெளியாகியிருந்தது.

யாழ். மாவட்டத்தில் இருந்து விண்ணப்பித்தவர்கள் தங்கள் விண்ணப்பங்களை தகுந்த முறையில் (சகல அத்தாட்சிப் பத்திரங்களின் மூலப்பிரதிகளுடன்) ஆயுள்வேதவைத்தியசபைக்கு அனுப்பியிருந்தால் அவர்களுக்கு நேர்முகப் பரீட்சைக்கு தோற்றுவதற்குரிய கடிதம் அரச அதிபர் செயலகத்தில் இருந்து அனுப்பி வைக்கப்படும்.

நேர்முகப் பரீட்சைக்கு தோற்றுபவர்கள் அன்றைய தினமே பரீட்சைக் கட்டணத்தை செலுத்த வேண்டும் என்றும் —

பதிவிற்கு விண்ணப்பித்த சகல தகுதியுடைய மருத்துவர்களுக்கும் நேர்முகப் பரீட்சைக்குரிய கடிதம் சில தினங்களில் அனுப்பி வைக்கப்படும் என்றும் —

இணைப்பதிகாரி வைத்திய கலாநிதி சு. பவானி தெரிவித்தார். (உ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அ.தி.மு.க. போட்டிக் குழுவின் தலைவர் கண்ணப்பன் கைது

சென்னை, டிச. 16

தமிழ்நாடு முன்னாள் பொதுத்துறை அமைச்சரும், போட்டி அ. தி. மு. கவின் தலைவருமான கண்ணப்பன் நேற்றுமுன்தினம் இரவு சென்னையில் குற்றப் பிரிவு பொலீஸாரால் கைது செய்யப்பட்டார்.

பல கோடி ரூபா மதிப்புக்கு நிலக்கரி இறக்குமதி பேர ஊழல் தொடர்பாக அவர் கைது செய்யப்பட்டதாகக் கூறப்படுகிறது.

மத்திய புலனாய்வுத் துறையின் அலுவலகத்துக்கு விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்ட அவர் இன்று முதன்மை அமர்வு நீதிபதி முன் ஆஜர் செய்யப்படுவார் என்று தெரிவிக்கப்பட்டது.

ஜெயலலிதா ஆட்சியில் அமைச்சராக இருந்த கண்ணப்பன் தேர்தலில் ஜெயலலிதா தோற்றதும் அவருக்கு எதிராகக் கிளம்பினார். அதனால் அ. தி. மு. கவிலிருந்து ஜெயலலிதாவால் வெளியேற்றப்பட்டார்.

தேர்தலின் பின்னர் அ. தி. மு. கவிலிருந்து வெளியேற்றப்பட்ட அல்லது வெளியேறிய பிரமுகர்கள் ஒன்று சேர்ந்து அ.தி.மு.க. போட்டிக் குழு ஒன்றை அமைத்தபோது கண்ணப்பன் அதன் தலைவரானார். (உ-3)

## ஹொங்கொங் நிர்வாகியாக சீன ஆதரவாளர் ஒருவர் தெரிவு

ஹொங்கொங் சீனாவின் ஆட்சிக்குள் வரும் போது அதன் நிர்வாகியாகப் பணியாற்றுவதற்கு ஹொங்கொங்கின் கப்பல் வர்த்தகரும் பெரும் செல்வந்தருமான துன்சிகுவா தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

ஹொங் கொங்கில் வாழும் 400 பேர் அடங்கிய வாக்களிக்கும் குழு ஒன்றினால் மேற்கொள்ளப்பட்ட இரகசிய வாக்கெடுப்பில் இவர் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

வாக்களிப்பு நடைபெற்ற மண்டபத்தின் வெளியே பெரும் எண்ணிக்கையான மக்கள் குழுமி பொது வாக்களிப்பின் மூலமே தலைமை நிர்வாகியைத் தேர்ந்தெடுக்க வேண்டும் எனக் கோஷமெழுப்பினர்.

வாக்களிப்புக் குழுவில் இருந்த 400 பேரும் சீன அரசின் ஆதரவாளர்கள் எனவும் நிர்வாகியாகத் தெரிவு செய்யப்பட்ட துன்சிகுவாவும், சீன அரசின் சார்பானவர் எனவும் அவதானிகள் தெரிவித்தனர். (இ-10)

### தாயின் வயிற்றுக்குள்

## 4 மாதக் கருவுக்கு அறுவைச் சிகிச்சை!

மணிலா, டிச. 16

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் தாயின் வயிற்றுக்குள் இருந்த 4 மாதக் கருவில் அறுவைச் சிகிச்சை செய்து கருவின் எலும்புக்குள் இருக்கும் சத்துப் பொருளை மாற்றி, வேறு ஆரோக்கியமான சத்துப் பொருளை ஊசி மருந்து மூலம் செலுத்தி அற்புதம் படைத்துள்ளனர் அமெரிக்க வைத்திய நிபுணர்கள்.

மருத்துவ உலகில் நிகழ்த்தப்பட்டுள்ள முதல் அற்புதச் சாதனையாக இது அமைந்துள்ளது.

கருவில் இருந்த வம்சாவழி நோய் ஒன்று அகற்றப்பட்ட குழந்தை சுகமாய்ப் பிறந்து 17 மாத ஆரோக்கியமான குழந்தையாக தவழ்ந்து விளையாடுகிறது என்று ''நியூ இங்கிலண்ட் ஜேனல்ஒவ் மெடிசின்'' என்ற மருத்துவப்பத்திரிகை சில தினங்களுக்கு முன்னர் செய்தி வெளியிட்டுள்ளது. (உ-3)

## ஐ. மு. அரசில் காங்கிரஸ் பங்கேற்காது

ஐக்கியமுன்னணி அரசில் காங்கிரஸ் கட்சி பங்கேற்கமாட்டாது என்று காங்கிரஸ் தலைவர் சீதாராம் கேசரி தெரிவித்தார்.

அரசில் பங்கேற்பது என்று காங்கிரஸ் கட்சி முடிவு செய்தால் அது அக்கட்சி பதவிக்காக தவிக்கிறது என்ற தவறான கருத்தை மக்களிடையே தோற்றுவித்து விடும் என்றும் பி.ரி.ஐ. செய்தி நிறுவனத்துக்கு பேட்டியளிக்கையில் அவர் தெரிவித்தார்.

காங்கிரஸ் கட்சியின் கொள்கைக்கு முற்றிலும் எதிராக தேவகௌடா அரசு செயற்பட்டால் மட்டுமே அவரது அரசுக்கு தமது கட்சி ஆதரவை நீடிப்பது பற்றி மறு பரிசீலனை செய்ய வேண்டியிருக்கும் என்றும் கேசரி தெரிவித்தார்.

### வெள்ளக் காலத் ...

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

குளங்கள், நீர்நிலைகளுக்கு அபாய அறிவிப்பு இடுதல்,

★ கிராம மட்டத்தில் சுகாதாரத் தொண்டர்கள், பல துறைகளுடனும் இணைந்து சுகாதாரக் கல்வி நோய்த் தடை வேலைகளில் உதவுதல்.

### புலிகள் தலைவர்...

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

உறுப்பினர்களும் நன்கு புரிந்து கொண்டுள்ளனர்.

தீர்வுத் திட்டம் இன்னமும் வெறும் யோசனையாகவே இருப்பது எமக்கு பெரும் ஏமாற்றத்தையே தருகின்றது. அது செயலுருப்பெறும் போது அதற்கு ஏற்றவாறு கத்தோலிக்க அமைப்புக்கள் செயற்படும்.

இரண்டு தரப்பாருக்கும் நிவர்த்தி செய்ய முடியாத இழப்பை ஏற்படுத்திவரும்—இரத்தம் சிந்தும் — இந்தப் போரை நிறுத்துவதற்கான வழி வகைகளைக் கண்டறிவதற்காக பேச்சுவார்த்தை மேசைக்கு இரு தரப்பாரும் வரவேண்டிய உரிய தருணம் இதுவாகும்.

என்ன விலை கொடுத்தாவது சமாதானத்தை எட்ட வேண்டும் என்றுதான் கத்தோலிக்க மதபீடத்தின் விருப்பமும் மன்றாட்டமுமாகும். — என்றார்.

வவுனியா அகதிகளுக்கு வழங்கவென டாக்டர் ஜெயலத் ஜெயவர்த்தனா குழுவினர் அன்பளிப்புச் செய்த— ஏழு இலட்சம் ரூபா பெறுமதியான — மருந்து வகைகளை வவுனியா ஆஸ்பத்திரியில் வைத்து மன்னார் ஆயர் பொறுப்பேற்றார்.

அந்த மருந்து வகைகள் வவுனியா ஆஸ்பத்திரியில் களஞ்சியப்படுத்தப்பட்டன.

---


## கண்ணீர் அஞ்சலி

### அமரர் சதாசிவம் நித்தியானந்தன்

யாழ். பிரதம தபாலகத்தைச் சேர்ந்த
எமது சக ஊழியன்

**அமரர் ச. நித்தியானந்தனின்**

திடீர் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதுடன், எமது கண்ணீர் அஞ்சலியையும் அன்னார்க்கு காணிக்கையாக்குகின்றோம்.

யாழ். தபாலக நலன்புரிச் சங்கம்.

(44136)


---


## 9 ஆவது மாதத்தில் நெஞ்சில் பெருகும் அஞ்சலிகள்

(1996 - 12 - 16)



பெற்ற தாய் மடியில்:-
**1942-06-19**

உற்ற தாய் அடியில்:-
**1996-03-25**

### அமரர் முருகேசு பாலசிங்கம் அவர்கள்

(சந்தம்புளியடி, காரைநகர்)

ஒன்பது மாதமென்ன ஒவ்வொரு யுகங்களிலும்
உங்களை நினைத்தேவாழ எங்களில்
உறைந்தீர் அப்பா!
மண்ணிதைப் பிரிந்த வேளை மற்றொரு
ஊரில் நீங்கள்
மரித்திட மன்னவன் ஈசன் விதித்தனன்
தானோ அப்பா!

கண்களில் உங்கள் கோலம் காதினில் உங்கள் ஓசை
கனவினில் உங்கள் காட்சி கருத்தினில் உங்கள் வாழ்வு
எண்ணிட வேகுதே நெஞ்சம் எங்களின்
தெய்வமே உங்களை
எப்படி மறக்கலாம் எதைச் சொல்லி ஆறலாம்
இறைவனே! இதுவும் விதிதானா..?

''எங்களில் வாழும் உங்களை
இறைவன் காக்க வேண்டும்''

மனைவி - திருமதி பா. யோகமலர்
பிள்ளைகள், மருமகன்,
பேரன் (பவுண்)
**திரு. எம். பி. அருளானந்தன்**
ஆசிரியர் (மகன்)

இல, 120/4 திருவள்ளுவர்சாலை,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

(சி/3731)


---


## முதலாம் ஆண்டு நினைவலைகள்



அன்னை மடியில்:
11
—
02
—
1922

இறைவன் அடியில்:
28
—
12
—
1995

### சுப்பர் குழந்தைவேலு

**திதி: 16 - 12 - 96**

நீங்கள் மறைந்து ஓராண்டு சென்றாலும்
உங்கள் பிரிவை மறக்க முடியவில்லை.

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:
— குடும்பத்தினர்.

காளி கோயிலடி,
கோப்பாய்.

(44144)


---


## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



### திருமதி தயாரூபி கோவிந்தராசா

(அழகியற் பட்டதாரி — சங்கீத ஆசிரியை,
யாழ். சரசாலை ஸ்ரீ கணேச வித்தியாலயம்)

மலர்வு:
**19 - 12 - 1966**

உதிர்வு:
**16 - 11 - 1996**

புன்முறுவல் பூத்த முகம்
புதுமைகள் செய்யும் சிந்தனை
நன்முத்தானாய் சங்கீதத்தால்
நம் வித்தியாலயச் சொத்தானாய்
கோபித்து அறியாதவள் நீ
கோவியைக் கைப்பிடித்தாய் நீ!
கோவியை மறந்தாயோ நீ!
பாவிகள் ஆனோம் நாம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
பழைய மாணவர் சங்கம்,
யா/ சரசாலை ஸ்ரீகணேசவித்தியாலயம்.
சாவகச்சேரி.

(சி-3718)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூராட்சித் தேர்தல்கள்: தடுமாறும் தமிழ்க் கட்சிகள்!

## கூட்டறிக்கையும் குறுக்கோட்டமும்

வடக்கில் உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடுவதில்லை என்று ஐந்து தமிழ்க் கட்சிகள் கூடி முடிவு செய்ததாகப் பத்திரிகைகளில் அறிக்கை வெளியாகியது.

தமிழர் விடுதலைக் கூட்டணி வழக்கம் போல தனியாக ஓர் அறிக்கை விடுத்து உள்ளூராட்சித் தேர்தல் நடத்த முடியாத சூழல் இருப்பதாகத் தெரிவித்தது.

வழக்கமாக இவ்வாறான தேர்தல்களில் கூட்டணி ஆர்வம் காட்டுவதில்லை.

கிழக்கில் நடைபெற்ற உள்ளூராட்சிச் சபைத் தேர்தல்களிலும் கூட்டணி போட்டியிடவில்லை. பின்னர் நடைபெற்ற பொதுத் தேர்தலில் போட்டியிட்டது.

நாடாளுமன்றம் செல்லக் கூடிய விருப்பம் உள்ளவர்கள் மட்டுமே கூட்டணியின் முக்கிய அச்சாணிகளாக இருப்பதால், அவர்கள் உள்ளூராட்சித் தேர்தல்களில் ஆர்வம் காட்டுவதில்லை.

ஏனையதமிழ்க்கட்சிகளைப் பொறுத்தவரை எத்தேர்தலையும் அவர்கள் தவறவிடுவதில்லை. ஜனநாயகப் பாதைக்கு வந்த பின்னர் ஏனோ அப்படியொரு பிடிவாதம் (?!)

வேட்பாளர் பட்டியலை நிரப்புவதும் அவர்களுக்கு ஒன்றும் கஷ்டமல்ல.

அரசியல் என்றால் பலதும் பத்தும் இருக்கத்தான் செய்யும் என்ற அடிப்படையில் மசாலாப்பட்டியல் வெளியிட்டு தேர்தலில் போட்டியிட முடியும்.

ஓர் இயக்கத்தில் இருந்து பணத்தோடு ஓடியவர், ஒழுக்க மீறலில் ஈடுபட்டவர் இன்னொரு இயக்கத்தின் வேட்பாளர் பட்டியலில் இடம்பெறுவார்.

தமது சமூக விரோத செயல்களையும், கட்டுப்பாட்டு மீறல்களையும் நியாயப்படுத்த குறிப்பிட்ட சில பேர்வழிகளுக்கு வாய்ப்பளிப்பதும் 'ஜனநாயகம்' என்று தமிழ்க் கட்சிகள் தப்பாக நினைத்துக் கொண்டிருக்கின்றன.

கடந்த காலத்தில் தமிழ்க் கட்சிகள் வெளியிட்ட வேட்பாளர் பட்டியல்களில் இருந்து தெரிந்து கொண்ட உண்மை அதுதான்.

பொறுமையாகத் திட்டமிட்டு கட்டுக் கோப்பான அரசியல் அணிகளை உருவாக்குவதில் ஜனநாயகப் பாதைக்கு வந்துள்ள தமிழ்க் கட்சிகள் அனைத்துமே இது வரை வெற்றிபெறவில்லை.

இக்கட்சிகளின் பலம் என்பது ஓடுகாலிகளைத் தக்க வைத்துக் கொள்ளும் திறமையில்தான் தங்கியிருக்கிறது. அதனால் பதவிகள், வசதிகள் என்பவற்றை பங்கிட்டுக் கொடுக்கக் கூடிய தேர்தல்கள், மற்றும் வாய்ப்புக்களைப் பயன்படுத்த வேண்டிய கட்டாயத்தில் உள்ளன.

அதன் பொருட்டு தமது அரசியல் நிலைப்பாடுகளில் உறுதியாக நிற்க முடியாமல் ஊசலாடுகின்றன.

எதையும் தீர்மானிப்பவர்களாக இல்லாமல் அவ்வப்போது தோன்றும் நிலைமைகளுக்கு ஏற்ப அந்த நிலைமைகளில் வாலைப் பிடித்துக் கொண்டு தொங்கிச்செல்பவையாக தமிழ்க் கட்சிகள் மாறிவிட்டன.

இந்தப் பலவீனத்தை உணர்ந்தே தமிழ்க் கட்சிகளின் கருத்தைக் கேட்காமல் அரசாங்கம் உள்ளூராட்சித்தேர்தல் அறிவிப்பை வெளியிட்டது.

தேர்தல் நடந்தே தீரும் என்ற நிலை உருவானால் தமிழ்க் கட்சிகள் ஓடிவரும் என்று நினைத்துவிட்டது அரசாங்கம்.

அப்படியிருந்தும் வடக்கில் உள்ளூராட்சிச் சபை தேர்தலைக் கண்டித்து ஐந்து தமிழ்க் கட்சிகள் கூட்டாக அறிக்கை விட்டது ஓர் ஆச்சரியம் தான்.

உள்ளூராட்சித் தேர்தல் நடத்த வேண்டாம் என்று அறிக்கை விட்ட ஐந்து தமிழ்க் கட்சிகளில் ஒன்று ரெலோ.

அறிக்கை விட்டசூட்டோடு சூடாக தேர்தல் ஆணையாளர் அலுவலகத்துக்குச் சென்று வேட்பு மனுக்களைக் கேட்டு வாங்கியது ரெலோ இயக்கம்.

வேட்பு மனு வாங்கப் போவது தொடர்பாக ஏனைய நான்கு கட்சிகளுக்கு ரெலோ மூச்சேவிடவில்லை. மறுநாள் பத்திரிகையில் செய்தி வந்தபோது தான் ஏனைய கட்சிகளுக்கு விஷயமே தெரியும்.

சமீபகாலமாக அரசும்,புலிகளும் பேசவேண்டும் என்று ரெலோ இயக்கம் பல அறிக்கைகளை வெளியிட்டுள்ளது.

புலிகளை அரசியல் ரீதியில் பலவீனமாக்கும் ஒரு நோக்கமும் பிரதான உள்ளடக்கமாக உள்ள உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிட தனது சக கட்சிகளையும் பின்னால் தள்ளி விட்டு ஓடியது.

இவ்வாறான தடுமாற்றங்கள் தமிழ்க் கட்சிகள் தமது அரசியல் நிலைப்பாடுகளில் தெளிவாக இல்லையென்பதையே காட்டுகின்றன.

புலிகள் உள்ளூராட்சித் தேர்தலை கடுமையாகச் சாடி அறிக்கை விட்ட பின்னர் தான் மீண்டும் ஐந்து தமிழ்க் கட்சிகளும் கூடின; யாழ். குடாநாட்டில் போட்டியிடுவதில்லை என்று முடிவு செய்தன.

முதல் எடுத்த முடிவில் ஏற்பட்ட தடுமாற்றத்தை நிறுத்த புலிகளின் அறிக்கை தான் தேவைப்பட்டிருக்கிறது.

*

- நன்றி:- தினமுரசு -

குரோதங்களை மறந்து

# புலிகளுடன் பேச விரும்புகிறது கூட்டணி

## சிவசிதம்பரம் கூறுகின்றார்

கொழும்பு, டிச. 16

தமிழர் விடுதலைக் கூட்டணி — விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுவது அவசியமாகும். அதற்கான சந்தர்ப்பம் கிடைக்குமானால் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தக்கூட்டணி தயாராகவிருக்கிறது.

தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் எம். சிவசிதம்பரம் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

கொழும்பிலிருந்து வெளிவரும் ''நவமணி'' பத்திரிகைக்கு அளித்த பேட்டி ஒன்றிலேயே அவர் இதைத் தெரிவித்துள்ளார்.

அந்தப் பேட்டியில் அவர் தெரிவித்த விடயங்கள் வருமாறு:-

இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாக விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட வேண்டும் என்பதில் உறுதியான நிலைப்பாட்டை நாம் கொண்டிருக்கிறோம்.

சமாதானத்தை ஏற்படுத்தக்கூடிய வகையில் புலிகள் இயக்கத்துடன் எம்மால் தொடர்பு கொள்ள முடியாத நிலை ஏற்பட்டமை ஒரு துரதிர்ஷ்டமாகும். ஆனால் தமிழர் விடுதலைக் கூட்டணி, விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தையில் ஈடுபடுவது மிகவும் அவசியமாகும். அதற்கான சந்தர்ப்பம் கிடைக்குமானால் அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தக் கூட்டணி தயாராகவிருக்கிறது.

அதற்காகப் பழைய குரோதங்களை மறக்கவும் ஆயத்தமாகவுள்ளோம். சில கசப்பான சம்பவங்கள் கடந்த காலங்களில் நடந்துவிட்டன. என்றாலும் தமிழ் மக்களின் எதிர்காலத்தை மனதில் கொண்டு அவற்றை மறப்பது சிறந்தது என கருதுகிறோம்.

புலிகள் இயக்கத்தின் உறுதியான தன்மையை ஏற்றுக் கொள்கிறேன். ஆனால் உலகில் இப்படியான இயக்கங்கள் ஒரு கால கட்டத்தில் பேச்சுவார்த்தைக்கு வருவது தான் நாம் கண்ட சரித்திரம்.

பேச்சுவார்த்தைக்கான காலகட்டம் இதுதான்.

கடும் வெறுப்பும், பகைமையும் கொண்டிருந்த தென்னாபிரிக்காவின் மண்டேலாவும், கிளார்க்கும் சமாதானத்திற்காக 3 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே பேச்சுவார்த்தைகளைத் தொடங்கியிருந்தனர்.

இங்கே புலிகளின் திறமையை, கொள்கைப்பற்றை, வீரத்தை மெச்சுகின்ற அதே நேரம், அவர்கள் ஒரு கால கட்டத்தில் பேச்சுவார்த்தைக்கு வரவேண்டியிருக்கிறது — என்றார். (உ-3)

# டக்ளஸுக்கு அமைச்சர் பதவி: அஷ்ரப் கடுமையான எதிர்ப்பு

கொழும்பு, டிச. 16

வடக்கு— கிழக்கு மாகாண விவகாரங்களுக்குப் பொறுப்பான அமைச்சுப் பதவியை ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகமான டக்ளஸ் தேவானந்தாவுக்கு வழங்குவதற்கு அரச உயர்பீடம் விரும்பினாலும் —

அரசுக்குள் இடம் பெற்றிருக்கும் அமைச்சரும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவருமான எம். எச். எம். அஷ்ரப் அதனைக் கடுமையாக எதிர்ப்பதாக கொழும்புஆங்கில வாரஇதழ் ஒன்று தெரிவித்திருக்கின்றது.

ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகத்துக்கு ஓர் அமைச்சுப் பதவியை வழங்குவதன் மூலம் அக்கட்சியை அரசுக்குள் இழுத்துக் கொள்ள அரச உயர்பீடம் விரும்புவதும் —

வடக்கு — கிழக்கு விவகாரங்களுக்குப் பொறுப்பான அமைச்சுப் பதவி என்றால் மட்டுமே அதனை ஏற்க முடியும் என டக்ளஸ் தேவானந்தா அரசுக்கு திட்டவட்டமாக தெரிவித்திருப்பதும் — தெரிந்தவையே.

டக்ளஸ் கேட்கும் அமைச்சை அவருக்கு வழங்க அரசு விரும்பினாலும் அரசுக்குள் இருக்கும் அஷ்ரப் அணியினர் அதனைக் கடுமையாக எதிர்ப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அமைச்சுப் பதவி விவகாரம் குறித்து கருத்து வெளியிட்ட டக்ளஸ் தேவானந்தா —

எந்த விவகாரமும் அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்துக்குக் குறையாததாக வழங்கப்பட வேண்டும். பிராந்திய மட்ட நிர்வாக அதிகாரம் மத்திய அரசிடமிருந்து பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். — என்றார்.

இடைக்கால நிர்வாகம் மிக அவசியம் என்றும் அவர் கூறினார். (உ)

வடக்கில் உள்ளூராட்சி சபைகளுக்கான

# தேர்தலில் பங்குபற்ற தமிழ்க்கட்சிகள் இணங்கியமை அரசுக்கு ஒரு வெற்றி!

வடக்கில் உள்ளூராட்சித் தேர்தல்களில் போட்டியிடுவதற்கு தமிழ்க் கட்சிகளை இணங்க வைத்திருப்பது அரசுக்குக் கிடைத்த ஒரு வெற்றி என கொழும்புப் பத்திரிகை ஒன்று தெரிவித்திருக்கின்றது.

இது தொடர்பாக அப்பத்திரிகை மேலும் தெரிவித்துள்ள தகவல்கள் வருமாறு:-

ஈ.பி.டி.பி., புளொட் ஆகிய கட்சிகளின் பிரதிநிதிகள் அண்மையில் ஜனாதிபதியைச் சந்தித்துப் பேசிய போது, உள்ளூராட்சித் தேர்தல் திகதியை நீண்டகாலம் பின்போட முடியாது; தமிழ்க் கட்சிகள் யாழ். குடாநாடு சென்று தேர்தலில் போட்டியிடத் தயாராவதற்கு மட்டும் ஒரு கால அவகாசம் தரப்படும் வகையில் புதிய திகதி அறிவிக்கப்படும் என்று ஜனாதிபதி உறுதியாகக் கூறியிருந்தார்.

தமிழ்க் கட்சிகள் தவிர வேறு யாரும் வடக்கில் தேர்தலில் போட்டியிடத் தயாராக இல்லை. பிரஜைகள் குழுக்களில் உள்ளவர்களைப் போட்டியிட வைக்க மேற்கொண்ட முயற்சிகளும் தோல்வி கண்டிருந்தன.

இந்நிலையில் யாழ். குடாநாட்டில் தேர்தலை நடத்துவதாயின் தமிழ்க் கட்சிகளையே அரசாங்கம் நம்பியிருக்கவேண்டும்.

அதனால்தான் தமிழ்க்கட்சிகள் கேட்டுக் கொண்டதற்கு இணங்கி அரசாங்கம் தேர்தல் திகதியைப் பின்போடச் சம்மதித்தது.

உள்ளூராட்சித் தேர்தல் அறிவிப்பை வெளியிட முன்னர் தமிழ்க் கட்சிகளை அபிப்பிராயம் கேட்டிருந்தால்'இப்போதைக்கு வேண்டாம்' என்று அவை மறுத்திருக்கலாம்.

அதனால் அரசாங்கம் தேர்தல் அறிவிப்பைத் தானாகவே வெளியிட்டது. தமிழ்க் கட்சிகளும் தேர்தலை நிராகரிக்கவில்லை. பின்போடச் சொல்லித்தான் கேட்டன. ''அதற்கென்ன — திகதியை மாற்றலாம் ஆனால் அதற்கிடையில் நீங்கள் அங்கு போய் தயாராகி விடவேண்டும்'' என்று ஜனாதிபதி கூறி விட்டார்.

உள்ளூராட்சித் தேர்தல் ஒத்திவைக்கப்பட்டிருந்தால் தமிழ்க் கட்சிகளுக்கு வெற்றியாக இருந்திருக்கும். ஆனால் நடந்திருப்பதோ திகதி மாற்றம்தான். தமிழ்க் கட்சிகளை தேர்தலில் போட்டியிட வைத்துவிட்டமையால் அரசாங்கத்திற்குத்தான் வெற்றி என்று அரசியல் அவதானிகள் கூறுகின்றனர்.

தமிழ்க் கட்சிகள் யாவும் ஒன்றுபட்டு ஒரே நிலைப்பாட்டில் நின்றிருந்தால் உள்ளூராட்சித் தேர்தலை காலவரையறையின்றி ஒத்திவைக்க வேண்டிய அவசியம் அரசுக்கு ஏற்பட்டிருக்கும். தமிழ்க் கட்சிகள் சில ஊசலாடத் தொடங்கியதே உறுதியான முடிவுக்கு வரமுடியாமைக்கான காரணம் என்று கூறப்படுகிறது.

—என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

### அவசரம்

தேர்தலைப் பின்போடுமாறு கோரிய ஐந்து தமிழ்க் கட்சிகளில் ஒன்று சத்தம் சந்தடியின்றி வேட்பு மனுப் பத்திரத்தைக் கொழும்பில் வாங்கிக் கொண்டு வவுனியாவுக்கு 'பறந்து' போனதாம்!

வவுனியாப் பிரமுகர்களின் கையெழுத்தை உரிய படிவத்தில் வாங்கிக் கொண்டு விட்டால், தப்பித் தவறி தேர்தல் - அறிவிக்கப்பட்ட- உரிய — காலத்தில் நடைபெற்றாலும், கையெழுத்துப் போட்டவர்களை வேறு கட்சிகள் தங்கள் பட்டியலில் சேர்த்துக் கொள்ள மாட்டார்கள் என்ற புத்திசாலித்தனம் தான் இந்த அவசரத்துக்குக் காரணம்.

கடைசி நேரத்தில் போட்டியிடும் வேட்பாளர்களின் பட்டியலைச் [illegible] ஆள் பிடிக்க அலைந்தாலும் 'டிமாண்ட்' அதிகமாகிவிடும் என்பது மற்றைய காரணமாம்!

மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம்:

# எதிரணியின் கருத்தை அறிய அரசு முயற்சி!

கொழும்பு, டிச. 16

மூன்றாம் தரப்பு மத்தியஸ்தர்கள் ஊடாக விடுதலைப் புலிகளுடன் அரசு பேச்சு நடத்துவது குறித்து எதிர்க் கட்சிகளின் கருத்தை நாடி பிடித்துப் பார்ப்பதற்கு அரசு முயன்று வருகின்றது.

இது தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் வேண்டுகோளுக்கு இணங்க, தமிழர் விடுதலைக் கூட்டணி எம். பியான நீலன் திருச்செல்வம் எதிர்க்கட்சிகளுடன் உத்தியோகப் பற்றற்ற முறையில் பேச்சுக்கள் நடத்தி வருகின்றார்.

கடந்த வாரம் இது தொடர்காக பல எதிர்த் தரப்பு எம். பிக்களை அவர் சந்தித்தார்.

அச்சந்திப்புகளில் ஒன்று கொழும்பு ஹோட்டல் ரேணுகாவில் இடம் பெற்றது.

அச்சந்திப்பில் கலந்து கொண்டோரில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எம். பியான ஹக்கீம், ஐ. தே. க. பிரமுகர் மகிந்த சமரசிங்க, தமிழர் விடுதலைக் கூட்டணிப் பிரமுகர்கள் எம். சிவசிதம்பரம், ஆர். சம்பந்தன் ஆகியோரும் அடங்குவர்.

சந்திப்பில் கலந்து கொள்ள வருகை தராத முக்கிய பிரமுகர் ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா என்று தெரிவிக்கப்பட்டது. (உ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

தோடை, எலுமிச்சை, கொய்யா, மாதுளை, மா, பலா முதலிய பழமரக்கன்றுகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: விவசாயப் விண்ணை, சைவ வித்தியா பருத்திச் சங்கம், கலாசாலை வீதி, திருநெல்வேலி.
(44137)

சுத்த இன பொமனேறியன் ஆண், பெண், இரண்டு இன நாய்க்குட்டிகள் ஏழு, 60 நாள்கள் பூச்சி நீக்கப் பட்டுள்ளது. தொடர்பு:- திருமதி R. S. தேவராஜா, இல. 7, கற்குழி ஒழுங்கை, சாவகச்சேரி. (சி/3733)

புலோலி மேற்கு கிராமக் கோட்டு ஒழுங்கையில் வட இந்து மகளிர் கல்லூரிக்கு அருகில் ஐந்தரைப்பரப்பு காணியில் அமைந்துள்ள சகல வசதிகளும் கொண்ட வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: வ. கு. கணபதிப்பிள்ளை, சட்டத்தரணி, கிராமக்கோட்டு ஒழுங்கை, புலோலி மேற்கு, புலோலி.
(9068)

### தவறிவிட்டது

கி. நித்தியானந்ததேவியின் 628571104 V இலக்க தேசிய அடையாள அட்டை கைலாச பிள்ளையார் கோயிலுக்கும், நாவலர் சந்திக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து ஒப்படைத்து சன்மானத்தைப் பெற்றுக் கொள்ளவும். தேவி அச்சகம், இல. 114/19, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
(44126)

### மாதிரி வினாக்கள்

N. C. E பரீட்சைக்குரிய மாதிரி வினாப்பத்திரங்களை கொண்ட வெளியீடு. தரமானது. பரீட்சை வினா முறையில் தயாரிக்கப் பட்டவை. கிடைக்குமிடம்: New Science Hall, கன்னாதிட்டி, யாழ்ப்பாணம். விலை: 125/-.
(44135)

### அக்கரைச் சீமையில்

விறுவிறுப்பான சுவையான, யதார்த்தமான நாவல். 250 நாடகங்களை எழுதிய அராலியூர் ந. சுந்தரம் பிள்ளை உங்களை இங்கிலாந்திற்கு அழைத்துச் செல்கிறார். 25 ரூபாவுடன் வாசித்துப் பாருங்களேன்! பூபாலசிங்கம் புத்தகசாலை.
(44121)

### வாங்கலும் விற்றலும்

ஆதனங்கள் (காணிகள்) விற்பனை செய்ய விரும்புவோரும், கொள்வனவு செய்ய விரும்புவோரும் எம்முடன் தொடர்பு கொள்ளவும். திரு. த. சபாநாயகம், நிலஅளவையாளர், இலக்கம். 11 தனங்கிளப்பு வீதி, சாவகச்சேரி.
(சி/3734)

**ஸ்ரார்**
**கல்வி நிலையம்**
**சுன்னாகம்**
**A/L 97, 98**
**புள்ளி விவரவியல்**
**ஸ்ரனிலோஸ்**
**அளவையியல்**
**R. P. சர்மா**
**தமிழ்**
**ஆர்த்திகன்**
**ஆரம்பம்:**
**18-12-96**
மாலை 3 மணி.
(44139)

### வாடகைக்கு

சகல வசதிகளுடனும், நல்ல தண்ணீருடனும் கூடிய வீடு, யாழ். பிரபல பாடசாலைகளுக்கும், கச்சேரிக்கும், நல்லூரிற்கும் அண்மையிலும், யாழ். கல்வித் திணைக்களம் வலயம் 01 இற்கு சமீபமாகவும் உண்டு. நேரில் தொடர்பு கொள்க. திருமதி க. ஸ்ரீகாந்தா, 23, குறொசட் ஒழுங்கை, கச்சேரி – நல்லூர் வீதி, யாழ்ப்பாணம். (44142)

### ஆங்கிலம், கணிதம்

ஆண்டு 6–11 விசேடமாகக் கற்பிப்பதால் உயர்ந்த பெறுபேறுகளை 97 இல் பெற முடியும். London Inter ஆசிரியர், இல. 85, சிவன் கோயிலடி, சிவன் கோயில் மேற்கு வீதி, திருநெல்வேலி.
(44118)

### வணிக புள்ளிவிவரவியல்

சு. பத்மராஜ் B.Sc அவர்களின் வணிக புள்ளிவிவரவியல் விற்பனையாகிறது. பூபாலசிங்கம் புத்தகசாலை யாழ்ப்பாணம். (சி/3722)

## வலிகாமம் தெற்கு பிரதேச சபை
## (சுன்னாகம் - உடுவில், ஏழாலை உப அலுவலகங்கள்)
# ஆதனவரி அறிவித்தல்

1997ஆம் ஆண்டுக்கான ஆதனவரியை **31-01-97** ஆம் திகதிக்கு முன்பாக முழுமையாகச் செலுத்துவோர்களுக்கு அவ்வருட மொத்த வரியில் **10 வீதம் கழிவு** வழங்கப்படும். ஒவ்வொரு காலாண்டுக்குரிய வரியை அந்தக் கந்தாயத்தின் முதல் மாத முடிவுக்குள் செலுத்துவோருக்கு காலாண்டுக்கான வரியின் **5 வீதம் கழிவு** வழங்கப்படும்.

குறிப்பிட்ட திகதிக்குள் ஆதனவரிகளைச் செலுத்தத் தவறினால் வசிப்பிடங்களுக்கும், வெற்றுக் காணிகளுக்கும் முறையே **15வீதமும்**, ஏனைய ஆதனங்களுக்கு **20 வீதமும்** விறாந்துக் கட்டணமாக வரியுடன் சேர்த்துச் செலுத்தப்பட வேண்டும்.

எனவே தங்கள் ஆதனங்களுக்குரிய வரிகளை **31-01-97** ஆம் திகதி நண்பகல் **12-00** மணிக்கு முன்பாக முழுமையாக இக்காரியாலயத்திலும் அந்த அந்த உப அலுவலகங்களிலும் செலுத்தி வரிக் கழிவுகளைப் பெற்று சபையுடன் ஒத்துழைக்குமாறு வரியிறுப்பாளர்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.

குறிப்பு:

1. 1996ஆம் ஆண்டு முடியவுள்ள வரி நிலுவைகள் செலுத்தப்பட்ட பின்பே 1997ஆம் ஆண்டுக்கான வரி ஏற்றுக் கொள்ளப்படும்.
2. சேதமடைந்ததும் காலியாகவுள்ளதுமான ஆதனங்களுக்கான வரி விலக்கின் பொருட்டான விண்ணப்பங்கள் **31-01-1997** க்கு முன் கிடைக்கக் கூடியதாக இவ்வலுவலகத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
3. தற்போதைய காலச் சூழ்நிலை காரணமாக வருடாந்த அறிவித்தல் பத்திரங்கள் கிடைக்கத் தாமதமானாலும் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொண்டு தங்கள் வரிகளை உரிய காலத்தில் அலுவலகத்தில் செலுத்தி நிர்வாகத்துடன் ஒத்துழைக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**ஆ. மகாலிங்கம்,**
**விசேட ஆணையாளர்.**

வலிகாமம் தெற்கு பிரதேச சபை,
சுன்னாகம். (சி-3728)

# 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| மலர்வு: | உதிர்வு: |
|---|---|
| 23 | 08 |
| 12 | 01 |
| 1948 | 1995 |

## அமரர் சண்முகலிங்கம் புஸ்பநாதன்
(உரிமையாளர், சுமிதா றேடிங் கொம்பனி, கொழும்பு)

திதி: **16 - 12 - 1996**

எல்லோரையும் அன்புடன் நேசித்தீர்கள்
எல்லோருக்கும் உதவுவதில் முன்னின்றீர்கள்
பாசமுடன் எங்களுடன் வாழ்ந்தீர்கள்
பாதியிலே எம்மை விட்டு பிரிந்ததேனோ!

உங்கள் ஆத்மா சாந்தியடைய என்றும் பிரார்த்திக்கும்.

**மனைவி, பிள்ளைகள், உறவினர்கள்.**

தேவாலய வீதி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில். (44138)

## மனோகரன் & வெற்றிவேல்
### உங்களை அன்புடன் அழைக்கின்றது

**25 வருடங்களுக்கு மேலாக கட்டட அமைப்பில் முன்னணி வகிக்கும் ஸ்தாபனம் வழங்கும் சேவைகள்.**

★ கட்டட அமைப்பு ★ திருத்த வேலை ★ வரைபடம் ★ மதிப்பீடு ★ வாடகைக்கு இரும்புச்சாரங்கள் (STEEL-SCAFFOLDING)

1997 ஆம் ஆண்டு வேலைகளுக்கு — கூலி ஒப்பந்தகாரர், மேசன்மார், தச்சுவேலை செய்வோர், தொழிலாளர் டிசம்பர் 25–ந் திகதிக்கு முன் தங்கள் விவரங்களைக் கடிதம் மூலம் விண்ணப்பிக்கவும்.

**நிர்வாகப் பங்காளர்,**
**மனோகரன் & வெற்றிவேல்**

'இளவேனில்'
49 A, அம்பலவாணர் வீதி,
யாழ்ப்பாணம். (44140)

# நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 1957 | 1992 |
| 10 | 12 |
| 25 | 16 |

## அமரர் A. K. குணசிங்கராசா
(கல்வியியற்புலம் - முன்னாள் விரிவுரையாளர், யாழ். பல்கலைக்கழகம்)

திதி: **1 - 1 - 1997**

வெண்கல நாவினராய் மேடைகளில் முழங்கியமை
விஸ்வவித் தியாலயத்து விரிவுரைகள் நிகழ்த்தியமை
விண்ணகத்தும் அதுவாற்ற மிக விரைந்து மறைந்தவிது
மேதினிசெய் தவக்குறையாய் விளம்பலன்றி
என்செய்வோம்.

துணைவரின், அப்பாவின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுதல் செய்வோம்.

- அமரரின் குடும்பத்தினர்.

'கங்காஸ்தான்',
கம்பர் மலை,
வல்வெட்டித்துறை. (9073)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



| மலர்வு: | உதிர்வு: |
|---|---|
| 30 | 16 |
| 04 | 11 |
| 1979 | 1996 |

செல்வி
## தியாகராஜா சிவந்தினி
(சிவந்தி)

[யா/ கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய க. பொ. த. (சாதாரண தர) மாணவி– 1995]

பண்பின் உறைவிடமே பாசத்தின் குலவிளக்கே மாங்குளத்தில் உன் உயிர் மாண்டதேனோ! சிவந்தி அம்மா உன் திருமுகத்தை இனி எங்கு காண்போம். சிவந்தி அக்கா, சிவந்தி அக்கா என்று கதறும் உன் உடன் பிறவா மழலை தம்பி பவன், தங்கை சுமி மற்றும் உன் பிரிவால் துயருறும் ஐயா, அப்பம்மா, யோகச்சித்தப்பா குடும்பம், ரதி அத்தை குடும்பம், பபா அன்ரி குடும்பம், றஞ்சன்ரி குடும்பம், குஞ்சன்ரி குடும்பம் ஆகியோர் உன் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

இ. குணசீலன்
(சித்தப்பா)

புதிய செம்மணி வீதி,
வேளாதோப்பு,
கல்வியங்காடு. (44143)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## ‘மரபு’ மாறாதா?

இனப்பிரச்சினைத் தீர்வு யோசனை குறித்து ஐக்கிய தேசியக் கட்சி, இப்போதைக்குத் தனது முடிவுகளை வெளியிட மாட்டாது.

அரசின் தீர்வு யோசனையை ஆராய்ந்து வரும் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் தீர்மானங்கள் குறித்த அறிக்கை வெளிவந்த பின்னரே — அக்கட்சி தனது முடிவுகளை வெளிப்படுத்தும்.

தெரிவுக் குழுவின் அறிக்கை, ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழுவினால் கவனமாகப் பரிசீலனை செய்யப்படும். அதன் பின்னரே கட்சியின் நிலைப்பாடு என்ன என்பது குறித்து அறிவிக்கப்படும்.

எதிர்க்கட்சித் தலைவரும், ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவருமான ரணில் விக்கிரமசிங்கா இவ்வாறு தெரிவித்திருக்கிறார்.

நாடாளுமன்றத்தின் பிரதான எதிர்க்கட்சியாகவும், தென்னிலங்கையின் இரு பெரும் கட்சிகளில் ஒன்றாகவும் விளங்கும் ஐ. தே. கட்சி, நாடாளுமன்றத் தெரிவுக் குழுவிலும் முக்கிய அங்கத்துவம் கொண்டது.

தெரிவுக் குழுவின் முடிவுகளை வகுப்பதில் அந்தக் கட்சியும் சேர்ந்து தான் உழைத்து வருகிறது. எனவே அது தனக்கென ஒரு முடிவைக் கொண்டிருந்தால் மட்டுமே, அந்தக் குழுவில் ஆக்கபூர்வமான பணியைச் செய்ததாக இருக்கும்.

தீர்வு யோசனையில் உள்ள ஒவ்வொரு விடயம் சம்பந்தமாகவும் — அம்சம் தொடர்பாகவும் — தனக்குள்ள கருத்தைச் சொல்லி, அது குறித்து அங்கு ஆராய்ந்து ஓர் உருப்படியான, நீதியான முடிவை எட்டுவதற்கும் பாடுபடுவதே பொருத்தமானது.

போரை நிறுத்த வேண்டும். நாட்டில் இரத்தப் பெருக்கை உண்டாக்கி, பொருளாதாரத்தைச் சீரழிக்கும் அதனை முடிவுக்குக் கொண்டு வந்தால் மட்டுமே நாட்டை அபிவிருத்தி செய்யலாம்; மக்களின் வாழ்க்கை நிலையைச் சீராக்கலாம். இனப்பிரச்சினை நோய்க்கு அரசியல் தீர்வு தான் பரிகாரம்.

இத்தகைய கருத்துகளில் தென்னிலங்கை அரசியல் கட்சிகளிடையே, தலைவர்களிடையே பெரும் வேறுபாடு இல்லை எனக் கொள்ளலாம். அவர்களின் பேச்சுக்களும் எழுத்துக்களும் அதனையே உறுதிப்படுத்துகின்றன.

எனவே தமிழர்களுக்குத் தாம் வழங்கவுள்ள, விருப்பம் கொண்ட, உரிமைகள் எவை என்பதனை சிங்களத் தலைவர்கள் தமக்கிடையே முடிவு செய்வது மிக முக்கிய தேவை.

அந்தப் பொறுப்பில் இருந்து விலகிக் கொள்ளும் விதத்தில், நழுவிக் கொள்ளும் வகையில், தெரிவுக் குழுவின் முடிவு வரட்டும் அதன் பின்னர் யோசிப்போம் என்று ஐ. தே. கட்சியின் தலைவர் கூறுவது —

இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் விடயத்தில் அரசியல் லாபம் தேடும் இலக்கோடு தெற்கின் இரு பிரதான அரசியல் கட்சிகளும் ‘கொட்டிக் குழப்பும்’ பாங்கில் செயற்படுவதாகும். இது, நாற்பது ஆண்டு கால ‘மரபை’ பின்பற்றும் அணுகுமுறையே என்பதில் சந்தேகமில்லை.

இந்தப் போக்கு, இனப்பிரச்சினையும், போரும் மேலும் தொடர்வதற்கே உதவும். சமாதானமும், அமைதியும் உருவாகத் தடையாக இருக்கும்.

---

### தீர்வுத்திட்டம் குறித்து

# சர்வஜன வாக்கெடுப்பு மார்ச்சில் நடக்கலாம்!

இனப்பிரச்சினைத் தீர்வுக்கென அரசாங்கம் முன்வைத்துள்ள அதிகாரப் பரவலாக்கல் திட்டத்தை நாடாளுமன்றத்தில் சமர்பிப்பதற்கு முன்னர், எதிர்வரும் மார்ச் மாதத்தில் அதுகுறித்து மக்கள் கணிப்பு (சர்வ ஜன வாக்கெடுப்பு) ஒன்றைநடத்தலாமா என்பது குறித்து அரசின் உயர்மட்டத்தில் இரகசிய ஆலோசனை இடம் பெற்று வருகிறதாம். இது குறித்து கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இத்தீர்வுத் திட்டத்துக்கு ஐ.தே.க. ஆதரவுகிடைக்காத நிலையில் ஓர் அடையாளத்துக்காக அதனை பொதுமக்கள் தீர்வுக்கு விடுவதன்மூலம் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி இனப்பிரச்சினை தீர்வில் காட்டும் ஆர்வத்தை உலகுக்கு எடுத்துக் காட்ட முடியும் என அரச உயர் மட்டத்தில் நம்பப்படுவதாகவும் அச்செய்தி மேலும் கூறுகிறது.

எனினும் நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை பெறாத நிலையில் மக்கள் தீர்ப்புக்கு சமர்ப்பிக்கப்படும் அரசமைப்புத் திருத்தம் ஏதும் —

அது மக்கள் தீர்ப்பில் மக்களால் அங்கீகரிக்கப்பட்டால் கூட —

சட்ட வலுவற்றதாகவே இருக்கும் என சட்டவட்டாரங்கள் சுட்டிக்காட்டின.

---

## துரித தபால் சேவை

யாழ்ப்பாணம், டிச. 16

தற்சமயம் நடைபெற்று வரும் யாழ் — கொழும்பு விமான துரித தபால் சேவையில் பொதுமக்களும் தமது தபால்களை அனுப்ப வசதி செய்யப்பட்டுள்ளது என்று யாழ். பிரதம தபாலதிபர் திரு. சு. கோடீஸ்வரன் தெரிவித்தார்.

சாதாரண தபால் கட்டணத்துடன் மேலதிகமாக 10 ரூபா முத்திரையை ஒட்டி எந்தத் தபால் நிலையத்திலும் தபால்களை சேர்ப்பிக்கலாம் என்றும் —

இவ்வாறு அனுப்பப்படும் தபால்கள் ஏனைய தபால்களுடன் சேர்க்கப்படாமல் விசேட ஏற்பாடு மூலம் கொழும்பில் உடன் விநியோகிக்கப்படும் என்றும் — அவர் தெரிவித்தார்.

ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த ஏனைய நாள்களில் இந்தச் சேவை இடம்பெற்று வருகிறது. (உ-3)

---

# பிரபாவுடன் பேசவே ரத்வத்தை குழு வவுனியாப் பகுதிக்குச் சென்றதா?

## எம். பி. ஒருவரின் கேள்வி இது

கொழும்பு, டிச. 15

பாதுகாப்பு பிரதி அமைச்சர் அனுருத்த ரத்வத்த மற்றும் இராணுவத் தளபதி, பொலீஸ்மா அதிபர் ஆகியோர் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனுடன் பேச்சுவார்த்தை நடத்தவா வவுனியாவுக்கு போனார்கள்?

நாடாளுமன்ற உறுப்பினர் மத்தியில் இப்படியான கேள்வி எழுப்பப்பட்டுள்ளதாகக் கொழும்புத் தமிழ் வார இதழ் ஒன்று தெரிவித்தது.

இவர்கள் சென்ற ஹெலி இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இல்லாத பகுதியில் இறங்கியதும் —

பின்னர் ஒரு விவசாயியின் வழிகாட்டலில் வவுனியா வந்தடைந்ததாகக் கூறப்படுவதும் — தெரிந்தவையே.

இவர்களுடன் சென்றிருந்த வவுனியா மாவட்ட பொதுமக்கள் ஐக்கிய முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர் சுமதிபாலா, சம்பவத்தின் பின்னர் நாடாளுமன்றம் சென்ற போது, நாடாளுமன்ற கூடத்தில் எம். பிக்கள் பலரும் அவரைச் சூழ்ந்து கொண்டனர்.

அமைச்சரும் தாமும் மற்றும் இராணுவத் தளபதி, பொலீஸ்மா அதிபர் ஆகியோரும் தப்பி வந்த விடயத்தை சுவாரஸ்யமாக விவரித்துக் கொண்டிருந்தார்.

அச்சமயம் கண்டி மாவட்ட எம்.பியான வில்சன் குறுப்பு ஆராய்ச்சி குறுக்கிட்டு, ‘சும்மா பொய் சொல்லாதீர்கள்! நீங்கள் எல்லோரும் பிரபாகரனுடன் பேசப் போனீர்கள். ஆனால் காரியம் பிழைத்துவிட்டது அல்லவா?’ — என்று கேட்டார்.

சூழ நின்ற எம். பிக்கள் எல்லோரும் ‘‘கொல்’’ என்று சிரித்தனர்.

1989ஆம்ஆண்டுஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்ட சமயம் அப்போது சுதந்திரக் கட்சியில் இருந்த அனுரா பண்டார நாயக்காவும், தற்போதைய பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தையும் மற்றும் சிலரும் விடுதலைப்புலிகளுடன் ஆதரவு கோரி பேச்சு நடத்த சென்ற பம்பைமடுப் பகுதியிலேயே இந்தத் தடவையும் ஹெலி இறங்கியுள்ளது என்று மற்றொரு செய்தி தெரிவித்தது. (உ-3)

---

## உடுப்பிட்டி ஊடாக பஸ் சேவை

யாழ்ப்பாணம், டிச. 16

இன்று முதல் உடுப்பிட்டி ஊடாக பருத்தித்துறை வீதி வழியாக — பாதை இலக்கம் 751 ஊடாக — பஸ் சேவை நடைபெறும் என்று வட பிராந்திய போக்குவரத்து சபை பொது முகாமையாளர் வி. எஸ். சொக்கலிங்கம் தெரிவித்தார். (உ-5)

---

# தாயக தமிழரின் துயர் துடைக்கும் பிரிட்டனின் “ஸ்கொட்” நிறுவனம்

வெளிநாடுகளில் வாழும் இலங்கைத் தமிழர்கள் தமது தாயகத் தமிழர்களின் துயர் துடைக்கும் நோக்கில் தாம் வாழும் நாடுகளில் பல்வேறு நிறுவனங்களை அமைத்துள்ளனர்.

இந்த வகையில் இங்கிலாந்தில் வாழும் இலங்கைத் தமிழர்களின் நிறுவனங்களில் ஒன்றுதான் ஸ்கொட் (S.C.O.T.) என அழைக்கப்படும். தமிழ் பேசும் மக்கவின் நிரந்தர நிறுவனம் (Standing Com-mittee Of Tamil Speak-ing People) ஆகும்.

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு, நிபந்தனைகள் அற்ற பேச்சுவார்த்தைகள் மூலம் நிரந்தரத் தீர்வு காணப்பட வேண்டும் என்பதில் நம்பிக்கை வைத்துள்ள ‘ஸ்கொட்‘ நிறுவனம் தனது கருத்துக்களை மனித உரிமைகள் அமைப்புகள் மூலம் இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகள் அமைப்புக்கும் எடுத்தியம்பும் பணியில் ஈடுபட்டுள்ளது.

ரி. வி. ஆறுமுகத்தை தலைவராகவும், செல்வி கே. பத்மாசனியை செயலாளராகவும், என். அரியரத்தினத்தைப் பொருளாளராகவும் கொண்ட செயற் குழுவைக் கொண்ட இந்த நிறுவனத்தில் 239 இலங்கைத் தமிழர்கள் உறுப்பினர்களாக உள்ளனர்.

தாயகத்தில் துன்புற்று வாழும் மக்களின் நிவாரண மற்றும் புனர்வாழ்வுப் பணிகளுக்காக ஸ்கொட் நிறுவனம் நிதி திரட்டும் பணியில் முயற்சியுடன் உழைத்துவருகிறது.

இந்த நிறுவனத்துக்கு அதன் அங்கத்தவர்களே பெருமளவில் நிதியை வழங்கி வருகின்றனர். பரதநாட்டியம் போன்ற கலை நிகழ்ச்சிகளை நடத்தியும் இந்த நிறுவனம் நிதியைத் திரட்டி வருகிறது.

தொழில்சார் வல்லுநர்கள் பெரும்பாலானோரை அங்கத்தவர்களாகக்கொண்ட இந்த நிறுவனம் இலங்கையின் வடக்கு — கிழக்கில் உள்ள தொண்டர் அமைப்புகளுக்கும் மற்றும் சமய, சமூக அமைப்புகளுக்கும் நிதி உதவி அளித்து வருகிறது.

### நிதி உதவி

1995/96 ஆம் நிதியாண்டுக் காலத்தில் இந்த நிறுவனம் இலங்கையில் சமூகப் பணிகளில் ஈடுபட்டுள்ள 18 அமைப்புகளுக்கு சுமார் 20 இலட்சம் ரூபாவை [22,000 ஸ்ரேர்லிங் பவுண்ட்ஸ்] நன்கொடையாக வழங்கியுள்ளது.

கடந்த ஆண்டு இந்த நிறுவனத்திடமிருந்து நன்கொடை பெற்ற அமைப்புகளின் விவரங்கள்:-

★ ஸ்ரீ சாரதா சேவாச்சிரமம், பருத்தித்துறை — 2000 ஸ்ரேர்லிங் பவுண்ட்ஸ்.

★ அரசாங்க மருத்துவமனை, யாழ்ப்பாணம்—1000 ஸ்ரேர்லிங் பவுண்ட்ஸ்.

★ திருநாவுக்கரசு நாயனார் குருகுலம் — ஆதீனம், மட்டக்களப்பு — 900 ஸ்ரேர்லிங் பவுண்ட்ஸ்.

★ வெளிநாட்டு அபிவிருத்திக்கான கத்தோலிக்க அமைப்பு — 2000 ஸ்ரேர்லிங் பவுண்ட்ஸ்.

★ பிரிட்டிஷ் செஞ்சிலுவைச் சங்கம் (சிறிலங்காவில் பயன்படுத்த) — 2000 ஸ்ரேர்லிங் பவுண்ட்ஸ்.

★ மங்கையர்க்கரசியார் மகளிர்இல்லம், மட்டக்களப்பு —1000 ஸ்ரேர்லிங்பவுண்ட்ஸ்

★ இலங்கை இந்து மகாசபை — 4000 ஸ்ரேர்லிங் பவுண்ட்ஸ்.

★ விபுலானந்தர் அனாதை மாணவர் இல்லம், அக்கரைப்பற்று — 500 ஸ்ரேர்லிங் பவுண்ட்ஸ்.

★ யெசுட் அகதிகள் சேவை மட்டக்களப்பு— 1000ஸ்ரேர்லிங் பவுண்ட்ஸ்.

★ ஸ்ரீசண்முகா நம்பிக்கை நிதியம், திருகோணமலை— 3100 ஸ்ரேர்லிங் பவுண்ட்ஸ்

★ லோங் நிறுவனம், கிளிநொச்சி—1000 ஸ்ரேர்லிங் பவுண்ட்ஸ்.

★ அகில இலங்கை இந்து காங்கிரஸ், கொழும்பு—1000 ஸ்ரேர்லிங் பவுண்ட்ஸ்.

★ திருகோணமலை இந்து மகளிர் அமைப்பு — 1000 ஸ்ரேர்லிங் பவுண்ட்ஸ்.

★ மாணிக்கவாசகர் சிறுவர் இல்லம், அக்கரைப்பற்று—500 ஸ்ரேர்லிங் பவுண்ட்ஸ்.

★ லயன்ஸ் கழகம், கொழும்பு — 1000ஸ்ரேர்லிங் பவுண்ட்ஸ்.

★ ஐ. ரி. டி. சி — 100 ஸ்ரேலிங் பவுண்ட்ஸ்.

★ கிழக்கு மாகாணப் பல்கலைக்கழகம் — 1000 ஸ்ரேர்லிங் பவுண்ட்ஸ்.

★ றோட்டறிக் கழகம், யாழ்ப்பாணம் — 500 ஸ்ரேர்லிங் பவண்ட்ஸ்.

(1 பவுண்ட் = சுமார் 92. 00 ரூபா)

---

# அரச ஊழியர், ஆசிரியர் ஓய்வுபெற விருப்பம்

அச்சுவேலி, டிச. 16

நாளைக்கு முன் சுயவிருப்பு அடிப்படையில் ஓய்வுபெற பல அரசாங்க உத்தியோகத்தர்கள் மற்றும் ஆசிரியர்கள் முன்வந்துள்ளனர்.

நாளை 17 ஆம் திகதிக்கு முன்னர் ஓய்வு பெறுபவர்களுக்கும் 17 ஆம் திகதிக்குப் பின்னர் ஓய்வு பெறுபவர்களுக்கும் வெவ்வேறு முறைகளில் ஓய்வூதியக் கணிப்பும், திரட்டிய ஓய்வூதியக் கொடுப்பனவும் வழங்கப்பட விருப்பதால், 17 ஆம் திகதிக்கு முன்னர் ஓய்வுபெற பலர் முன்வந்துள்ளனர்.

யாழ். குடாநாட்டில் தற்போது பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறையும் —

திணைக்களங்களில் ஊழியர்கள், அதிகாரிகள் பற்றாக் குறையும் நிலவும் இவ்வேளையில் பல உத்தியோகத்தர்கள், ஆசிரியர்கள் ஓய்வுபெற முன்வந்திருப்பது பற்றாக்குறையை மேலும் அதிகரிக்கச் செய்யும் எனக் கூறப்படுகின்றது. (இ.11)

---

## நாளை

**மார்கழி 2**

செவ்வாய்க்கிழமை

**திதி:** ஸப்தமி முற் பகல் 8.24 வரை. அட்டமி புதன்கிழமை காலை 6.18 வரை.

**நட்சத்திரம்:** பூரட்டாதி முன் இரவு 9.44 வரை.

[illegible]

சுபநேரம்: 10.53 - 12.23

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

---

## திருவெம்பாவை

யாழ்ப்பாணம், டிச. 16

குடாநாட்டில் உள்ள அனேக ஆலயங்களில் இன்று காலை உதயத்துக்கு முன்னர், திருவெம்பாவை பூசை ஆரம்பமாகிறது.

தொடர்ந்து பத்து நாள்கள் நடைபெறும் திருவெம்பாவையின் போது மாணிக்கவாசகரின் திருப்பள்ளி எழுச்கி, திருவெம்பாவைப் பதிகங்கள் பாடப்படும்.

அனேக ஆலயங்களில் திருவாதவூரர் புராண படனமும் நடைபெறும். [அ-30]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நத்தார் புதுவருட பண்டிகையை முன்னிட்டு

**ராசி பட்டுச் சோலையின் சிறப்பு விற்பனை**

எம்மிடம் புத்தம் புதிதாக இறக்குமதி செய்யப்பட்ட முகூர்த்தப்பட்டுப்புடவைகள், பட்டு வேஷ்டிகள், இந்தியன் சாறிவகைகள், மற்றும் ஸ்கேட் அன்ட் பிளவுஸ், கவுண், சேட், ரீசேட், சூட் என்பவற்றை உங்கள் எண்ணம் போல் தெரிவு செய்திட நாட வேண்டிய ஸ்தாபனம்:

**ராசி பட்டுச் சோலை**
**(Rasi Silks)**
70, 71A, நவீன சந்தை (உட்புறம்)
யாழ்ப்பாணம்.

★ எமக்கு வேறு கிளைகள் இல்லை என்பதனை வாடிக்கையாளருக்கு அறியத் தருகின்றோம்.

(44146)

## கண்ணீர் அஞ்சலி

காங்கேசன் சிமெந்துக் கூட்டுத்தாபன
நலன்புரி உத்தியோகத்தர்
**திரு. கந்தையா அருந்தவராஜா**
அவர்களின் சிரேஷ்ட புத்திரன்
**செல்வன் அருந்தவராஜா கிருஷ்ணா**

அவர்கள் 15-12-1996 இல் அகாலமரணமடைந்தார். அன்னாருக்கு எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கை ஆக்குகின்றோம்.

பாதுகாப்பு அதிகாரியும், உத்தியோகத்தர்களும்
பாதுகாப்புப் பகுதி
காங்கேசன் சிமெந்துக் கூட்டுத்தாபனம்
காங்கேசன்துறை. (சி/3737)

## கண்ணீர் அஞ்சலி

**திரு. கந்தையா அருந்தவராஜா**
(நலன்புரி உத்தியோகத்தர் - காங்கேசன்துறை, சிமெந்துக் கூட்டுத்தாபனம்)
அவர்களின் சிரேஷ்ட புதல்வன்
**செல்வன் கிருஷ்ணா**

15-12-1996 இல் அகாலமரணமானார். அவரது மறைவையொட்டி துயர் அடைந்திருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துகின்றோம்.

கலட்டி எச்சாட்டி மகா மாரி அம்மன்
பரிபாலன சபை,
கலட்டி.
(44153)

## மரண அறிவித்தல்

**சதாசிவம் நித்தியானந்தம்**
(தபால் அலுவலகம் - யாழ்ப்பாணம் M. S. O)

நீர்வேலி வடக்கை பிறப்பிடமாகவும், சிறுப்பிட்டி மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட சதாசிவம் நித்தியானந்தம் நேற்றுக் காலமானர்.

அன்னார் முத்தர் சதாசிவம் — சதாசிவம் லக்ஷ்சுமி ஆகியோரின் மகனும், திரு. திருமதி சின்னையா பொன்னம்பலம் — திரவியம் ஆகியோரின் மருமகனும், வசந்தாதேவியின் கணவரும், கஜப்பிரியன், லக்சிபன், வரலக்ஷ்சுமி ஆகியோரின் தந்தையும், சற்குணவதி, நாகேஸ்வரானந்தம், விமலாதேவி, வசந்தாதேவி (ஆசிரியை, அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயம்) ஆகியோரின் சகோதரனும், நாகேந்திரம் (களஞ்சியப் பொறுப்பாளர், பல நோ. கூட்டுறவுச் சங்கம், நீர்வேலி), மங்கையர்க்கரசி, பேரம்பலம், காந்தராசா, சரோஜினிதேவி, தயாளினிதேவி, ஸ்ரீ முருகதாஸ் ஆகியோரின் மைத்துனரும் ஆவர்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16-12-96) திங்கட்கிழமை முற்பகல் 11 மணியளவில் சிறுப்பிட்டி மேற்கில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
வசந்தாதேவி
(மனைவி)
சிறுப்பிட்டி மேற்கு,
சிறுப்பிட்டி. (44154)

**மேலும் மரண அறிவித்தல்கள் 2 ஆம் பக்கத்தில்**

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேசன் (பிறைவேற்) லிமிடெட்டினரால்யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 16 - 12 - 1996 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# தமிழ்க் கட்சிகளின் ஆளணியினர் வடக்கே வர அனுமதியில்லை

## உத்தேச தேர்தல் காலத்தில்

கொழும்பு, டிச. 16

தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் வடக்கே செல்லும் போது, தமது ஆள்களை — ஆளணியினரை கூட்டிச் செல்ல முடியாது.

வடக்கில் நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ள உள்ளூராட்சி தேர்தல்களை முன்னிட்டு தமிழ்க் கட்சிகளில் தலைவர்கள் அங்கு செல்லும் போது அவர்களின் ஆள்களைக் கூட்டிச் செல்ல அரசு மறுப்புத் தெரிவித்திருப்பதாக அறியப்படுகிறது.

இதனால் அக்கட்சியினர் பெரும் ஆச்சரியத்துக்கும், அதிர்ச்சிக்கும் ஆளாகி இருப்பதாக ''சண்டே ரைம்ஸ்'' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

வடக்கு உள்ளூராட்சித் தேர்தலின் பொருட்டு தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் அங்கு செல்லவேண்டும் என்று —

கடந்த வாரம் நடைபெற்ற சந்திப்பின் போது ஜனாதிபதி சொன்னார்.

அப்போது — வடக்கில் தாம் செல்லும் இடங்களில் — தங்கியிருக்கும் இடங்களில் — மினி முகாம் அமைக்க அனுமதிக்க வேண்டும் என்றும் —

அதற்காக தமது ஆள்களை அழைத்துச் செல்ல அனுமதிக்க வேண்டும் என்றும் — தமிழ்க் கட்சிகள் வற்புறுத்தின.

ஆனால் —

தமிழ்க் கட்சித் தவைர்கள் தம்முடன் அவர்களது ஆளணியினர் எவரையும் கூட்டிச் செல்ல முடியாது என்றும் —

அங்கு தமிழ்க்கட்சிகளுக்கு எவ்வாறு, எவ்வகையில் பாதுகாப்பு அளிக்கவேண்டும் என்பது குறித்து படைத்தரப்பு முடிவு செய்யும் என்றும் — தமிழ்க் கட்சிகளுக்கு தெரிவிக்கப்பட்டதாக ''சண்டே ரைம்ஸ்'' தெரிவித்துள்ளது.

(அ-3-150)

### ஆயுத...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

விக்கப்பட்டது.

யால — பாணமைப்பகுதிகளுக்கு இடையில் உள்ள கடற்பிரதேசம் எந்தக் காலத்திலும் பாதிக்கப்படக்கூடிய நிலை இல்லை என்றும் —

இந்தக் கடற்பகுதியில் இந்திய — இலங்கை கடற்படைக் கப்பலின் ரோந்தும் இல்லை என்றும் —

இதனால் விடுதலைப் புலிகள் தயது ஆயுத விநியோகத்தை மேற்கொள்ள இந்தப்பகுதியைப் பாவிக்க ஆரம்பித்துள்ளனர் என்றும் — மேலும் தெரிவிக்கப்பட்டது.

யால பகுதியில் விடுதலைப் புலிகளின் நடமாட்டத்தைத் தடுக்க படைகளை அனுப்ப முடியாத நிலை அரசுக்கு ஏற்பட்டுள்ளது என்றும் —

போதிய படைபலம் இல்லாமையே அதற்கு காரணம் என்றும் — அந்தப்பத்திரிகை குறிப்பிட்டுள்ளது.

(உ-3-150)

### பொருளாதார...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சந்தித்தேன். அவர் பேட்டியளிக்க மறுத்து விட்டார். தமது கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் நிலைமைகளைப் பார்வையிட இவர் ஏற்பாடுகளைச் செய்தார்.

கரடியனாறுப் பகுதியில் உயர் மட்டத் தலைவர் ஒருவரைச் சந்தித்தேன். அவர் பிரபாகரனுக்கு அடுத்தவர் என நினைக்கிறேன். அவர் தமது பெயரைக் கூற மறுத்து விட்டார்.

'நாம் பொருளாதார இலக்குகளையே இனித் தாக்குவோம்; பொருளாதாரத்தை முடக்குவோம். யுத்தம் நடத்தத் தேவையான நிதியை அரசு இந்த பொருளாதார நிலைகளில் இருந்து தான் பெறுகிறது. இதன் காரணமாகவே அவற்றைத் தாக்க திட்டமிட்டுள்ளோம்.

'சமய நிலைகளை நாம் தாக்க மாட்டோம். சர்வதேச அனுதாபத்தை எமக்கு எதிராக அது திருப்பி விடும். கடந்த கால நிகழ்வுகளில் இருந்து இந்தப் பாடத்தை நாம் கற்றுக் கொண்டோம்.

'சமாதான முயற்சிகளை நாம் வரவேற்கிறோம். பிரிட்டன் மத்தியஸ்தம் செய்ய முன் வந்துள்ளதை நாம் ஏற்கிறோம்' — என்று அவர் தெரிவித்தார். (உ-3-150)

### வேறு நாடுகள்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

தத்தில் இலங்கை அரசுக்கு அக்கறை இருப்பதாகத் தெரியவில்லை என்றும் அப்பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது.

இந்த விவகாரத்தில் இலங்கை அரசு நழுவல் போக்கைக் கடைப்பிடிப்பது போல் தெரிகிறது என்றும் அது குறிப்பிட்டது.

(உ-3-150)

### 24 இந்திய.....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சென்றதாகவும் —

இந்தியத் தூதர் நரேஷ்வர் தியாள் தெரிவித்தார்.

இக்குழுவில் எட்டு பிரிகேடியர்கள், ஒரு பிரிகேட் ஜெனரல், 3 கேணல்கள், ஒரு வைஸ் அட்மிரல், மூன்று கொமடோர்கள் உட்பட 24 அதிகாரிகள் அங்கம் வகித்துள்ளனர். (உ-3-150)

# வலி. மேற்கு கிராமங்கள் வெள்ளத்தால் பாதிப்பு

தொடர்ந்து பெய்யும் மழையினால் வலிகாமம் மேற்குப் பிரதேச செயலர் பிரிவில் பல கிராமங்கள் வெள்ளத்தால் சூழப்பட்டுள்ளன.

வெள்ளத்தை வெளியேற்றும் பொருட்டு கிராம சேவை அலுவலர்கள் தொண்டர்களின் உதவியுடன் வீதிகளை வெட்டி விட்ட போதிலும் வெள்ளம் வடிவதாக இல்லை.

மழை தொடர்ந்து பெய்வது அதற்கு ஒரு காரணம். வெள்ள வாய்க்கால் மூடுண்டு போய்க் கிடப்பது அடுத்த காரணமாகும்.

பொன்னாலை, சுழிபுரம் பகுதிகளில் அமைக்கப்பட்டிருக்கும் பாதுகாப்பு அரணால் அப்பகுதி வெள்ள வாய்க்கால்கள் யாவும் மூடுண்டு போய்விட்டன. அந்த அரண்களுக்கு சமீபமாக மிதிவெடிகள் புதைக்கப்பட்டு இருக்கலாம் என அஞ்சப்படுவதால் வெள்ள வாய்க்கால்களைத் துப்புரவு செய்ய முடியவில்லை.

இப்பகுதிகளில் வெள்ள நிலைமை மிக மோசமான நிலையில் உள்ளது.

நேற்று வரை கிடைத்த தகவலின்படி மண்வீடுகள், குடிசைகளில் வாழ்ந்த சுமார் ஆயிரம் குடும்பங்களின் வீடுகளுக்குள் வெள்ளநீர் உட்புகுந்து மக்கள் தொடர்ந்து வாழமுடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. அத்துடன் நலன்புரி நிலையங்களில் தங்கியிருந்த 120 குடும்பங்களின் குடிசைகளில் நீர் உட்புகுந்துள்ளது. இந்த மக்கள் பாடசாலைகள், பொது இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள பாடசாலைகள், பொது இடங்கள் பாதிக்கப்பட்ட மக்களின் பாவனைக்காக திறந்து விடப்பட்டுள்ளன.

### இலங்கை- ...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

விருப்பதாகவும் —

ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

இது குறித்து சட்ட வல்லுநர்களுடன் ஆலோசிக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

அரசாங்கம் முன் வைத்துள்ள அரசியல் யோசனைகள் முன்னெடுக்கப்பட காலம் செல்லும் என்பதால் — மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும் அவர்களின் அகதி வாழ்வை முடிவுக்கு கொண்டு வரவும் இடைக்கால நிம்மதி கிடைக்கும் நோக்குடன் இந்த வழக்குத் தொடரப்படுகிறது என்று அவர் கூறினார்.

(உ-3-5)

(முன்னர் வந்த செய்தி 3 ஆம் பக்கத்தில்)

### பேச்சை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பேச்சுக்கள் நடைபெறுவதற்கு யுத்த நிறுத்தம் நிபந்தனையாக இருந்தால் இருதரப்புக்கும் இடையில் யுத்தநிறுத்த மீறல் குறித்து சந்தேகங்கள் ஏற்படும். அதனால் பேச்சுக்கள் தோல்வியில் முடியும்.

இருதரப்பினரையும் பேச்சுவார்த்தை மேசைக்குக் கொண்டுவர மத்தியஸ்தர் எவராவது உதவலாம். ஆனால் இருதரப்பையும் பேச்சு மேசைக்குக் கொண்டு வந்தபின் அந்த மூன்றாம் தரப்பு மத்தியஸ்தர் தமது பணியில் இருந்து விலகிவிட வேண்டும்.

இருதரப்பும் நேரடியாகப் பேசவேண்டும் — இப்படி அவர் மேலும் தெரிவித்தார்.

(உ-3-150)

## கண்ணீர் அஞ்சலி

காங்கேசன் சிமெந்துக் கூட்டுத்தாபன
நலன்புரி உத்தியோகத்தர்
**திரு. கந்தையா அருந்தவராஜா**
அவர்களின் சிரேஷ்ட புத்திரன்
**செல்வன் அருந்தவராஜா கிருஷ்ணா**

அவர்கள் 15-12-1996 இல் அகாலமரணமடைந்தார். அன்னாருக்கு எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கை ஆக்குகின்றோம்.

சக உத்தியோகத்தர்கள்
பாகாப்புப் பகுதி —1970 ஆம் ஆண்டு அணி,
சிமெந்துக் கூட்டுத்தாபனம்,
காங்கேசன்துறை.
[சி/3736]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org